விலை: 50.00
பக்கங்கள் - 16
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 27
ஒலி 202 வள்ளுவர் ஆண்டு 2057 ஆனி 25 வியாழக்கிழமை (09.07.2026) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

## அழுத்தத்துக்கு பணிந்து பதவி விலக மாட்டேன்

### நீதி அமைச்சர் ஹர்ஷன

(கொழும்பு)

நீர்கொழும்பு சிறையில் ஏற்பட்ட கலவரம் தொடர்பாக, தனது பதவியிலிருந்து விலகுமாறு பல்வேறு தரப்பிலிருந்து அழுத்தம் வந்த போதிலும், அத்தகைய அழுத்தத்திற்குப் பணிந்து தாம் பதவி விலகப் போவதில்லை என நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார

15ஆம் பக்கம் பார்க்க

## நீதி அமைச்சர் ஹர்ஷன பதவி விலக வேண்டும்

### சபையில் நாமல் எம்.பி

(கொழும்பு)

நீர்கொழும்பு சிறைச்சாலையில் கடந்த 5 மற்றும் 6ஆம் திகதிகளில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்களின் போது 28 பேர் உயிரிழந்தமை மற்றும் நூற்றுக்கும் மேற்பட்டோர் காயமடைந்தமை தொடர்பில பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் நாமல்

02ஆம் பக்கம் பார்க்க

## மாதகலில் கைக்குண்டு கண்டுபிடிப்பு

(யாழ்ப்பாணம்)

இளவாலை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மாதகல் பகுதியில் உள்ள காணி ஒன்றில்கைக்குண்டு ஒன்று

15ஆம் பக்கம் பார்க்க

## வவுனியாவில் விபத்து ஒருவர் உயிரிழப்பு

(வவுனியா)

வவுனியா புளியங்குளத்தில் இடம்பெற்ற விபத்தில் 55 வயது மதிக்கத்தக்க ஆண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

புளியங்குளம் எரிபொருள் விற்பனை நிலையம் முன்பாக நேற்று முன்தினம் இரவு 8 மணியளவில் இச்சம்பவம்

15ஆம் பக்கம் பார்க்க

## யுத்தத்தால் இடம்பெயர்ந்த மக்களின்

# மீள்குடியேற்றத்தை விரைவுபடுத்துக

### ஜனாதிபதி அநுர பணிப்பு



(கொழும்பு)

யுத்தத்தினால் இடம்பெயர்ந்த மக்களை மீள்குடியேற்றும் வேலைத் திட்டத்தை விரைவுபடுத்துமாறு ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க பணிப்புரை விடுத்துள்ளார்.

(02ஆம் பக்கம் பார்க்க)

## கஜேந்திரகுமார் எம்.பியின் பாராளுமன்ற ஆசன வரிசை இடமாற்றம்

(கொழும்பு)

பாராளுமன்ற ஆசன வரிசையில் தனது ஆசனத்தை மாற்றுமாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பின

15ஆம் பக்கம் பார்க்க

## உயிரிழந்த சிறை அதிகாரிகளுக்கு நீதி அமைச்சர் இறுதி அஞ்சலி



(கொழும்பு)

கடமையின்போது துரதிர்ஷ்டவசமான சம்பவத்திற்கு முகங்கொடுத்து உயிரிழந்த சிறைச்சாலை அதிகாரிகளின் உடலங்களுக்கு நீதி அமைச்சர் நேற்று நேரில் சென்று தனது இறுதி மரியாதையைச் செலுத்தியுள்ளார்.

உயிரிழந்த அதிகாரிகளின் உடலங்களுக்கு அஞ்சலி செலுத்திய பின்னர்

02ஆம் பக்கம் பார்க்க

## யாழில் இந்த வருடம் 694 டெங்கு நோயாளர்கள் அடையாளம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் இந்த வருடத்தில் இது வரையிலான காலப்பகுதியில், டெங்கு நோயுடன் 694 நோயாளர்கள் இனங்காணப்பட்டிருக்கின்றார்கள் என யாழ்ப்பாணப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

யாழ். மாவட்ட செயலகத்தில் நேற்று இடம்பெற்ற டெங்கு ஒழிப்பு விசேட கூட்டத்தின்போதே அவ்வாறு

15ஆம் பக்கம் பார்க்க

## நீர்கொழும்பு சிறையில் கலவரம்

## மேலும் ஒரு சிறைச்சாலை அதிகாரி உட்பட மூவர் மரணம்

(கொழும்பு)

நீர்கொழும்பு சிறைச்சாலை கலவரத்தில் படுகாயமடைந்த சிறைச்சாலை அதிகார உட்பட மூவர் நேற்று மரணமடைந்துள்ளனர்.

நீர்கொழும்பு சிறைச்சாலை மோதலில் படுகாயமடைந்து கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த சிறைச்சாலை அதிகாரி ஒருவரே

15ஆம் பக்கம் பார்க்க

## செம்மணி புதைகுழி தொடர்பில் சந்திரிகாவிடம் விசாரணை நடத்துக

### சபையில் ரவிகரன் எம்.பி வலியுறுத்து



(கொழும்பு)

செம்மணி மனிதப் புதைகுழி தொடர்பில் உண்மைகளை வெளிப்படுத்தக்கூடாதென முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க, சோமரத்ன ராஜபக்ஷவிடம் கேட்டுக்கொண்டதாக அண்மையில் வெளியாகியுள்ள தகவல்கள் வெளியாகியுள்ள சூழலில், அவரிடம் விசாரணைகளை

02ஆம் பக்கம் பார்க்க

நடுவு நிலை தவறாது நின்று நிலைக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண் படுகொலை

## 8 பேருக்கு மரண தண்டனை

## கொழும்பு மேல் நீதிமன்றம் அதிரடி

(கொழும்பு)

பெண்ணொருவரைப் படுகொலை செய்தமை மற்றும் இருவருக்குப் பலத்த காயங்களை ஏற்படுத்தியமை ஆகிய குற்றச்சாட்டுகளில் குற்றவாளிகளாகக் காணப்பட்ட எட்டு பேருக்கு, கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி புத்திக ஸ்ரீ ராகல மரண தண்டனை விதித்து நேற்று புதன் கிழமை தீர்ப்பளித்தார்.

33 ஆண்டுகளுக்கு முன்பு இந்த குற்றத்தைச் செய்தவர்கள் தான் குற்றவாளிகள் என்பதை, முறைப்பாட்டாளர் எவ்வித சந்தேகத்திற்கும் இடமின்றி நிரூபித்துள்ளதாகத் தீர்ப்பளித்த நீதிபதி, ஜனாதிபதியால் தீர்மானிக்கப்படும் திகதியிலும் நேரத்திலும், வெலிக்கடை சிறைச்சாலையில் வைத்து இவர்களைத் தூக்கிலிடவும் உத்தரவிட்டார்.

1997 ஆம் ஆண்டு, கொழும்பு நீதிமன்ற எல்லைக்குட்பட்ட தாராவத்தை பகுதியில் ஹேவா படகொடகே குசுமாவதி மற்றும் வேலாயுதம் உதயகுமார் ஆகியோர் கொலை செய்யப்பட்டதுடன், மேலும் பலர் காயமடைந்த சம்பவம் தொடர்பிலேயே சட்டமா அதிபரால் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இரு தரப்பினருக்கிடையிலான தகராறு தீவிரமடைந்ததைத் தொடர்ந்து இந்தக் குற்றச்செயல் இடம்பெற்றதாக நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டது.

நீண்டகால வழக்கு விசாரணையின் பின்னர் தீர்ப்பை வழங்கிய நீதியரசர், குற்றஞ்சாட்டப்பட்ட 8 பேருக்கு எதிராக முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுகள் நியாயமான சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டார்.

இதனையடுத்து, குற்றவாளிகளாகத் தீர்ப்பளிக்கப்பட்ட 8 பேருக்கும் மரண தண்டனை விதிக்கப்படுவதாக நீதியரசர் உத்தரவிட்டார். (ம-7)

## மீள் குடியேற்ற...

வீடமைப்பு, நிர்மாணிப்பு மற்றும் நீர்வழங்கல் அமைச்சின் 2026ஆம் ஆண்டுக்கான திட்டங்களின் முன்னேற்ற மீளாய்வு மற்றும் 2027ஆம் ஆண்டுக்கான நிதித் தேவைகள் குறித்து நேற்று(8) முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்ற விசேட கலந்துரையாடலின் போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

மேலும், குறைந்த வருமானம் உடையவர்களின் பகுதியளவில் கட்டப்பட்ட வீடுகளுக்கு வீட்டுவசதி உதவி வழங்கும் வேலைத்திட்டமொன்றை நடைமுறைப்படுத்துமாறும் ஜனாதிபதி அறிவுறுத்தினார்.

அரசாங்கத்தின் வீடமைப்பு அபிவிருத்தி வேலைத்திட்டமான "தமக்கென ஒரு இடம் - அழகான வாழ்க்கை" என்பதன் முன்னேற்றம் மற்றும் அடுத்த ஆண்டுக்கான வரவுசெலவுத் திட்ட நிதி ஒதுக்கீடு குறித்தும் இங்கு கலந்துரையாடப்பட்டது.

அதேநேரம் மக்களின் நீண்டகால குடிநீர் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வை காண்பதற்காக, 2027ஆம் ஆண்டு வரவுசெலவுத் திட்டத்தில் விசேட கவனம் செலுத்துவதாக ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தெரிவித்தார்.

வெவ்வேறு அமைச்சுகளின் கீழ் ஒரே விடயப்பரப்புடன் தொடர்புடைய பல நிறுவனங்கள் காணப்படுவதன் காரணமாக திட்டங்களைச் செயற்படுத்துவதில் செயற்திறனின்மை ஏற்பட்டுள்ளதாகவும் அதேபோன்று பல வருடங்களுக்கு முன்னர் வெவ்வேறு நாக்கங்கள் மற்றும் தேவைகளுக்காக நிறுவப்பட்ட நிறுவனங்களை மேலும் பராமரித்துச் செல்வதன் மூலம் அரசாங்கத்திற்கு மேலதிக நிதிச் சுமையை சுமக்க வேண்டியேற்பட்டுள்ளதாகவும் ஜனாதிபதி சுட்டிக் காட்டினார். (ம-7)

## உயிரிழந்த...

அங்கு கூடியிருந்த சக சிறைச்சாலை அதிகாரிகள் கண்ணீர் மல்க நீதி அமைச்சரிடம் உருக்கமான கோரிக்கை விடுத்தனர். இச்சம்பவம் தொடர்பில் தமக்கு நியாயமான விசாரணை நடத்தப்பட்டு, தகுந்த நீதி பெற்றுத் தரப்பட வேண்டும் என அவர்கள் கேட்டுக்கொண்டனர்.

இதன்போது, சிறைச்சாலை அதிகாரிகள் மத்தியில் ஒரு அசாதாரணமான கோரிக்கை முன்வைக்கப்பட்டது. சம்பவத்தின் போது துப்பாக்கிச் சூடு நடத்திய சிறைச்சாலை அதிகாரிக்கு எதிராக எந்தவித சட்ட அல்லது ஒழுக்காற்று நடவடிக்கைகளும் எடுக்க வேண்டாம் என அவர்கள் அமைச்சரிடம் கோரினர். அந்த அதிகாரி மட்டும் அன்றைய தினம் துரிதமாகச் செயற்பட்டு, துப்பாக்கிப் பிரயோகம் செய்யாதிருந்திருந்தால், அங்கு ஒரு மிகப்பெரிய பேரழிவும் பெரும் உயிர்ச்சேதமும் ஏற்பட்டிருக்கும் என அதிகாரிகள் அமைச்சரிடம் சுட்டிக்காட்டினர்.

சூழ்நிலையின் தீவிரத்தை உணர்ந்தே அவர் அவ்வாறு செயற்பட வேண்டியிருந்தது என்பதை அவர்கள் அமைச்சருக்கு விளக்கினர்.

அதிகாரிகளின் உணர்வுபூர்வமான கோரிக்கைகளைக் கேட்டறிந்த நீதி அமைச்சர், இச்சம்பவம் தொடர்பில் முழுமையான விசாரணை நடத்தப்பட்டு அனைத்துத் தரப்பினருக்கும் குறிப்பாக உயிரிழந்த மற்றும் பாதிக்கப்பட்ட அதிகாரிகளுக்கு முழுமையான நியாயம் பெற்றுத்தரப்படும் என அங்கு கூடியிருந்தவர்களுக்கு உறுதியளித்தார். (ம-7)


## நீதி அமைச்சர்...

ராஜபக்ஷ கடுமையாக விமர்சித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று (08) இடம்பெற்ற விவாதத்தின் போது, இந்தத் துயரச் சம்பவத்திற்குத் தார்மீகப் பொறுப்பேற்று துறைசார்ந்த அமைச்சர் உடனடியாகப் பதவியிலிருந்து விலக வேண்டும் என அவர் வலியுறுத்தினார்.

இதேவேளை, "அமைச்சர் வெறுமனே பொறுப்பேற்பதாகக் கூறிவிட்டு தப்பிச் செல்ல முடியாது எனவும் உண்மையான 'முறைமை மாற்றம்' என்பது, இத்தகைய பாரிய உயிர் இழப்புகள் நிகழும்போது அமைச்சர் பதவியிலிருந்து விலகுவதிலேயே அமையும்" என அவர் குறிப்பிட்டுள்ளார். (ம-7)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



திரு.செல்லையா கண்ணதாஸ்

முதுகல்விமாணி (M.Ed)

கொழும்பு பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இன்று (09.07.2026) நடைபெறுகின்ற தேசிய கல்வி நிறுவகத்தின் பட்டமளிப்பு விழாவில் முதுகல்விமாணிப் பட்டத்தினைப் பெறுகின்ற எமது பாடசாலை ஆசிரியர் திரு. செல்லையா கண்ணதாஸ் அவர்களை பாராட்டி வாழ்த்துகின்றோம். இவர் மேலும் பல பட்டங்கள், பதவிகள் பெற்று சமூகத்திற்கு சேவையாற்ற வாழ்த்துகின்றோம்.

BEST WISHES

வாழ்த்துவோர் :

பாடசாலை நல்லுறவுக் கழகம்

யா/கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலை

(2494)


## செம்மணி...

முன்னெடுக்குமாறு வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் வலியுறுத்தியுள்ளார்.

பாராளுமன்றில் நேற்று புதன்கிழமை (8) உரையாற்றும்போதே பாராளுமன்ற உறுப்பினரால் மேற்கண்டவாறு வலியுறுத்தப்பட்டுள்ளது.

இது தொடர்பில் அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவிடம் விசாரணை நடாத்தப்பட வேண்டும். செம்மணி மனிதப் புதைகுழி தொடர்பில் உண்மைகளை வெளிப்படுத்தக்கூடாதென அப்போதைய ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தன்னிடம் கேட்டுக்கொண்டதான தகவல்களை சோமரத்ன ராஜபக்ஷ வெளிப்படுத்தியுள்ளார்.

அப்போதைய அரசாங்கத்தில் அமைச்சராக இருந்த ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளேவினால் சிறைச்சாலை அதிகாரி ஒருவர் மூலம் கடிதம் ஒன்று தமக்கு அனுப்பி வைத்திருந்ததாகவும் அந்தக் கடிதத்தை முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவே அனுப்பி வைத்திருந்ததாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

மனிதப் புதைகுழி தொடர்பில் எதனையும் கூற வேண்டாம் எனவும் பொதுமன்னிப்பு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருந்ததாகவும் தெரிவித்துள்ளார்.

எனவே சோமரத்ன ராஜபக்ஷ வெளிப்படுத்திய தகவல்களின் அடிப்படையில் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவிடமும் விசாரணைகள் நடத்தப்படவேண்டும் என்றுதான் செம்மணியோடு சார்ந்த மக்கள் எல்லோரும் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

செம்மணி மனிதப் புதைகுழியுடன் தொடர்புடைய அனைத்துக் குற்றவாளிகளும் கைதுசெய்யப்படவேண்டும். அவர்களுக்கு எதிராக மிகக் கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என இந்த உயரிய சபையின் ஊடாகக் கேட்டுக் கொள்கின்றேன் என்றார். (ம-7)


## கிழவன்காடு கலா மன்றத்தின் கண்ணீர்ப் பூக்கள்



கிழவன்காடு கந்தசுவாமி கோவில் பரம்பரை ஆதீனகர்த்தாவும் எமது கலாமன்றத்தின் செயற்பாடுகளுக்கு தன்னால் இயன்ற சேவையினை வழங்கிவந்த

சிவஸ்ரீ ஆறுமுகக்குருக்கள் சங்கர நாராயண சர்மா

அவர்களின் திடீர் மறைவுத் துயர் அறிந்து அதிர்ச்சியடைந்த நாம் அவரது குடும்பத்திற்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரது ஆத்மா எல்லாம் வல்ல முருகப்பெருமானின் திருவடிகளில் இளைப்பாற மனதாரப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

(C-5593)

கிழவன்காடு கலாமன்றம் காரைநகர் – யாழ் கிளை

நிர்வாக சபையினர், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள்

## வாகனங்கள் விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள Tata super Ace, பொலிரோ, செனோன் வாகனங்கள் விற்பனைக்கு உண்டு.

076 844 5520,
077 865 8557

(2495)

## உணவகத்திற்கு வேலையாட்கள் தேவை

யாழ்ப்பாணத்திலுள்ள உணவகம் ஒன்றிற்கு முச்சக்கரவண்டி சாரதி அனுமதிப்பத்திரமுடைய வேலையாட்கள் தேவை. முச்சக்கரவண்டி ஓடுவதில் முன் அனுபவம் அவசியம். ஊரெழு, உரும்பிராய், கொக்குவில், கோண்டாவில் பகுதியில் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது. சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்பு: 077 839 9177

(8009)

## வீடு வாடகைக்கு

யாழ். நகர் பகுதியில் 3 Rooms, Kitchen, Wash Room வெளியில் உள்ள சிறிய குடும்பம் தங்குவதற்கு உகந்த வீடு வாடகைக்கு உண்டு.

076 942 9254

(8008)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 63 ஆயிரத்தை கடந்தது

## டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை

**(கொழும்பு) ............................... நாட்டில் இதுவரை 63,835 டெங்கு நோய்த் தொற்றா எர்கள் அடையாளம் காணப்பட் டுள்ளனர்.**

மேலும், டெங்கு நோய்த் தொற்றினால் இந்த ஆண்டில் 42 உயிரிழப்புகளும் ஏற்பட்டு ள்ளதாக தேசிய டெங்கு கட்டுப் பாட்டுப் பிரிவின் தரவுகள் தெரி விக்கின்றன.

நோய்த் தொற்றால் ஏற்படும் இறப்பு விகிதம் 0.07 சதவீதமாக உள்ளது.

அண்மைய தரவுகளின்படி 2026 ஜூலை 7 நள்ளிரவு வரை யிலான நிலவரப்படி, ஜூன் மாதத்தில் அதிகபட்சமாக 21,543 நோய்த்தொற்றுச் சம்பவங்கள் பதிவாகியுள் ளன.

அதைத் தொடர்ந்து மே (8,590) மற்றும் ஜூலை (8,451) மாதங்களில் அதிக ளவான நோய்த் தொற்றுகள் பதிவாகியுள் ளன. மாவட்ட வாரியான தர வுகளின்படி, கொழும்பு (12,968 நோய்த் தொற்று) மற்றும் கம்பஹா (12,929 நோய்த் தொற்று ) ஆகிய மாவட்டங்கள் மிகக் கடு மையாகப் பாதிக்கப்பட்டுள் ளன.

வட மாகாணம் மற்றும் வட-மத்திய மாகாணம் ஆகிய வற்றில் தலா 1,000 இற்கும் குறைவான நோய்த்தொற்று க்கள் பதிவாகியுள்ளன.

டெங்கு தடுப்பின் 26 ஆவது வாரத்தில் அதிகாரிகள் 142 அதிக ஆபத்துள்ள சுகாதார மருத்துவ அதிகாரி பகுதிகளை அடையா ளம் கண்டுள்ளனர். இக்கால கட்டத்தில் தினமும் சராசரியாக 2,604 புதிய நோய்த் தொற்றுச் சம்பவங்கள் பதிவாகியுள்ளன. (நி)

# உத்தரவாத விலையில் நெல் கொள்வனவு

## இணக்கம் தெரிவித்த ஆலை உரிமையாளர்கள்

(கொழும்பு)

அரசாங்கத்தினால் நிர் ணயிக்கப்பட்டுள்ள உத்தரவாத விலைகளின் கீழ் நெல்லைக் கொள்வனவு செய்வதற்கு அனைத்து அரிசி ஆலை உரி மையாளர்களும் கொள்கை அளவில் இணக்கம் தெரிவித்து ள்ளனர்.

வர்த்தகம், வாணிபம், உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமை ச்சர் வசந்த சமரசிங்க இத னைத் தெரிவித்துள்ளார்.

அரிசி ஆலை உரிமை யாளர்களுடன் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே இந்த இணக்கப்பாடு எட்டப்பட் டுள்ளது.

அதன்படி, ஒரு கிலோகிராம் நாடு நெல்லை 120 ரூபாய்க் கும், சம்பா நெல்லை 130 ரூபா ய்க்கும், கீரிசம்பா நெல்லை 140 ரூபாய்க்கும் கொள்வனவு செய் வதில் உள்ள நடைமுறைச் சிக்கல்கள் குறித்து விரிவாக ஆராயப்பட்டுள்ளது.

அரசாங்கத்துடன் இணை ந்து இந்த உத்தரவாத விலை களில் நெல்லைக் கொள்வனவு செய்ய ஆலை உரிமையா ளர்கள் தயாராக இருப்பதாக வும், இத்திட்டத்தை வெற்றிகர மாக நடைமுறைப்படுத்த முடி ந்தால் சந்தையில் அரிசி விலையைக் குறைக்க அவர் கள் உடன்பட்டுள்ளதாக வும் அமைச்சர் தெரிவித்துள் ளார். (நி)

## சிறைச்சாலை சம்பவம்

# கறுப்புப்பட்டி அணிந்து

## எதிர்ப்பு தெரிவித்த எதிர்க்கட்சி எம்.பிக்கள்



(கொழும்பு)


எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் நேற்று பாரா ளுமன்றக் கூட்டத்தொடர் தொட க்கத்தில் கறுப்புப் பட்டி அணி ந்து தமது எதிர்ப்பை வெளி யிட்டனர்.

கடந்த 5 மற்றும் 6 ஆம் திகதிகளில் நீர்கொழும்பு சிறைச்சாலையில் நடந்த சம்பவத்தில் உயிரிழந்த 27 பேருக்கும் அரசு பொறுப்பேற்க வேண்டும் எனக்கோரி, எதிர் க்கட்சியினர் கறுப்புப் பட்டி அணிந்து தமது எதிர்ப்பை வெளிப்படுத்தினர். (நி)


# ஓராண்டு நினைவு அஞ்சலி

செம்பியன்பற்றைப் பிறப்பிடமாகவும் புலோலி தெற்கு புலோலியை வசிப்பிடமாகவும் கொண்ட

அமரர்.சீமாம்பிள்ளை கொன்சன்ரைன்



அன்பென்னும் ஆலமரமே அமைதியெனும் ஆழ்கடலே
அடக்கத்தின் அணிவிளக்கே அறநேர்மையின் அருஞ்சுடரே....!

பேச்சைவிடச் செயலாலே பெருமைபெற்ற பெரியவரே!
பாசமென்னும் பாலமிட்டு பக்குவமாய்க் காத்தவரே....!

இருபிள்ளைகள் இழப்பினையும் இரும்புநெஞ்சால் தாங்கிக்கொண்டு
இறைவன் தந்த சோதனையை இறைநம்பிக்கையால் வென்றவரே...!

நோய்வந்து நொந்தபோதும் நொடிகூட மனம் தளராமல்
நாடுகடந்து வந்த பிள்ளை நலம்கண்டு நெகிழ்ந்தவரே...!

மருமக்கள் பேரப்பிள்ளைகள் மலர்முகங்கள் கண்டுமகிழ்ந்து,
மனநிறைவோடு எமையெல்லாம் மௌனமாகப் பிரிந்தீரே....!

வீடெங்கும் வெறுமையாகி விழிநீரே பேசுகின்றது
எம் இதய ஆலயத்தில் என்றென்றும் வாழ்வீரே....!

புனித சூசையப்பர் தேவாலயத்தில் இன்று 09. 07. 2026 வியாழக்கிழமை காலை 8.00 மணிக்கு திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.
திருப்பலியைத் தொடர்ந்து அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் மதிய போசனத்திலும் அனைவரும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.
(இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்)

அமரர்.
சீமாம்பிள்ளை கொன்சன்ரைன்

(2489)

தோற்றம்-01.04.1948 மறைவு-09.07.2025

மாரக்கை,புலோலி தெற்கு,
புலோலி.

பிரிவால் துயருறும் அன்பு மனைவி,
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்
குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# விளையாட்டுச் செய்திகள்

## கடைசி 11 நிமிடங்களில் 3 கோல்கள்

# எகிப்தை வீழ்த்தி காலிறுதிக்குள் நுழைந்தது ஆர்ஜென்டினா



உலகக் கிண்ண கால்பந்து தொடரின் விறுவிறுப்பான 16 அணிகளுக்கான சுற்றில், எகிப்து அணியை 3-2 என்ற கணக்கில் வீழ்த்தி ஆர்ஜென்டினா அணி "மாஸ்" வெற்றி பெற்றது. கடைசி நிமிடங்களில் மெஸ்சி மற்றும் என்சோ பெர்னாண்டஸ் காட்டிய அதிரடியால் ஆர்ஜென்டினா காலிறுதிக்கு தகுதி பெற்றது.

குறித்த போட்டியில், நடப்பு சம்பியனான ஆர்ஜென்டினா அணி, பலம் வாய்ந்த எகிப்து அணியை எதிர்கொண்டது.

ஆட்டம் தொடங்கியது முதலே எகிப்து அணி ஆர்ஜென்டினாவிற்கு கடும் சவால் அளித்தது. ஆட்டத்தின் 15ஆவது நிமிடத்திலேயே எகிப்து வீரர் யாசர் இப்ராஹிம் அற்புதமாக ஒரு கோல் அடித்து ஆர்ஜென்டினாவிற்கு அதிர்ச்சி அளித்தார். இதனால் முதல் பாதியில் எகிப்து 1-0 என முன்னிலை பெற்றது.

தொடர்ந்து நடந்த இரண்டாவது பாதியிலும் ஆர்ஜென்டினாவின் தடுப்பாட்டத்தை உடைத்த எகிப் தின் முஸ்தபா ஜிகோ, 67ஆவது நிமிடத்தில் மற்றொரு கோல் அடித்தார். இதனால் எகிப்து அணி 2-0 என வலுவான முன்னிலை பெற்றிருந்தது.

கடைசி 11 நிமிடங்கள் மட்டுமே மீதமிருந்த நிலையில், ஆர்ஜென்டினா வீரர்கள் விஸ்வரூபம் எடுத்தனர். ஆட்டத்தின் 79ஆவது நிமிடத்தில் ஆர்ஜென்டினாவின் கிறிஸ்டியன் ரொமேரோ ஒரு கோல் அடித்து ஆட்டத்திற்குள் திருப்பு முனையை ஏற்படுத்தினார்.

இதனைத் தொடர்ந்து, 83ஆவது நிமிடத்தில் இரசிகர்களின் பலத்த எதிர்பார்ப்புக்கு மத்தியில் லியோனல் மெஸ்சி, அசாத்தியமாக ஒரு கோல் அடித்து 2-2 என சமநிலையை கொண்டு வந்தார். மைதானமே மெஸ்சி.. மெஸ்சி.. என அதிர்ந்தது.

ஆட்டத்தின் கூடுதல் நேரத்தில் (90+3 நிமிடம்) ஆர்ஜென்டினாவின் இளம் நட்சத்திரம் என்சோ பெர்னாண்டஸ், எகிப்தின் கோல் கீப்பரை ஏமாற்றி பந்தை வலைக்குள் தள்ளினார்.இதன் மூலம் 3-2 என்ற கணக்கில் ஆர்ஜென்டினா அணி "த்ரில்" வெற்றியைப் பதிவு செய்து, காலிறுதிக்குள் நுழைந்தது.

எகிப்து அணி மிகச்சிறப்பாகப் போராடியும் கடைசி நேரத்தில் ஆர்ஜென்டினாவை சமாளிக்க முடியாமல் உலகக் கோப்பை யிலிருந்து கண்ணீருடன் வெளியேறியது. (3)

# இங்கிலாந்துக்கு எதிரான 3 ஆவது ரி-20 தொடர்

## இந்திய அணி படுதோல்வி




இந்தியா - இங்கிலாந்து இடையேயான 3 ஆவது ரி-20 கிரிக்கெட் போட்டி நேற்று முன்தினம் நடை பெற்றது. இதில் நாணய சுழற்சியில் வென்ற இந்திய அணி முதலில் பந்து வீச்சை தேர்வு செய்தது. இதன்படி இங்கிலாந்து அணி முதலில் துடுப்பெடுத்தாடியது.

நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களில் இங்கிலாந்து அணி 7 விக்கெட் இழப்புக்கு 201 ஓட்டங்கள் எடுத்தது. அந்த அணியில் அதிக பட்சமாக தொடக்க வீரர் சால்ட் 44 பந்துகளில் 70 ஓட்டங்கள் குவித்தார்.

இதையடுத்து, 202 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் இந்திய அணி துடுப்பாட்டத்தை தொடாங் கியது. ஆரம்பத்தில் இருந்தே இந்திய அணி திணறியது. 5 ஓவர்களுக்குள் 5 விக்கெட்டுக்களை பறிகொடுத்த இந்திய அணி அதில் இருந்து மீளவில்லை. 11.4 ஓவர்கள் மட்டுமே தாக்குப் பிடித்த இந்திய அணி 76 ஓட்டங் களுக்கு ஆல் அவுட் ஆனது. இதன் மூலம் இங்கிலாந்து அணி 125 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

5 போட்டிகள் கொண்ட 20 ஓவர்கள் தொட ரில் 2-0 என்ற கணக்கில் இங்கிலாந்து அணி முன்னிலை பெற்றுள்ளது. இரு அணிகளுக்கும் இடையேயான முதல் போட்டி மழையால் பாதிக் கப்பட்டது குறிப்பிடத்தக்கது. தொடரை சமன் செய்ய மீதமுள்ள இரண்டு போட்டிகளிலும் இந்திய அணி வென்றாக வேண்டிய கட்டாயத்தில் உள்ளது. (3)

## உலக கிண்ண கால்பந்து போட்டி

# பெனால்டி ஷூட் அவுட்டில்

## கொலம்பியாவை வீழ்த்தியது சுவிஸ்

உலகக் கிண்ண கால்பந்து தொடரின் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் கொலம்பியாவை பெனால்டி ஷூட் அவுட்டில் 4-3 என்ற கோல் கணக்கில் வீழ்த்திய சுவிட்சர்லாந்து அணி காலிறுதிக்கு தகுதி பெற்றது. கனடாவின் வான்கூவரில் நடைபெற்ற இந்த ஆட்டத்தில், தொடக்கம் முதல் இரு அணிகளும் தாக்குதல் ஆட்டத்தை வெளிப்படுத்தின.

இருப்பினும், இரு அணிகளின் கோல் கீப்பர்களும் அபாரமாக செயற்பட்டதால், நிர்ணயிக்கப்பட்ட 90 நிமிட ஆட்ட நேரத்தில் எந்த அணியாலும் கோல் அடிக்க முடியவில்லை. இதனால் ஆட்டம் கூடுதல் நேரத்துக்கு சென்றது.

கூடுதல் நேரத்திலும் இரு அணிகளும் கோல் அடிக்கத் தவறியதால், வெற்றியாளரை தீர்மானிக்க பெனால்டி ஷூட் அவுட் முறை கடைப்பிடிக்கப்பட்டது. இதில் சுவிட்சர்லாந்து வீரர்கள் தங்களது வாய்ப்புகளை சிறப்பாக பயன்படுத்தினர். மறுபுறம், கொலம்பியா வீரர் டேவின்சன் சான்சஸ் முக்கியமான பெனால்டி ஷாட்டை தவறவிட்டதால், சுவிட்சர்லாந்து 4-3 என்ற கணக்கில் வெற்றி பெற்று காலிறுதிக்குள் நுழைந்தது. இந்த வெற்றியின் மூலம் காலிறுதியில் சுவிட்சர்லாந்து, ஆர்ஜென்டினா அணியை எதிர்கொள்கிறது. (3)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



# மன்னார் வைத்தியசாலைக்கு சி.ரி ஸ்கானர் இயந்திரம்

## வருட இறுதிக்குள் வழங்கப்படும்

## உறுதியளித்தார் சுகாதார அமைச்சர்

**(கொழும்பு)**

**மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலைக்கான சி.ரி ஸ்கானர் இயந்திரம் இவ்வருடம் டிசம்பர் மாதத்திற்குள் வழங்கப்படும். வைத்தியசாலையில் நிலவும் ஆளணி பற்றாக்குறையும் தீர்க்கப்படும் என சுகாதாரம் மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.**

வன்னிமாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதனினால் கடந்த பாராளுமன்ற அமர்வில் எழுப்பப்பட்ட கேள்விக்கு நேற்று புதன்கிழமை நடைபெற்ற அமர்வின்போது மேற்கண்டவாறு பதிலளித்தார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றியதாவது,

மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் ஒரு சி.ரி ஸ்கானர் இயந்திரம் இல்லை என்பதால் அவசர சிகிச்சை தேவைப்படும் நோயாளிகளுக்குச் சரியான நேரத்தில் நோயறிதல் செய்ய முடியாமல் போவதோடு, நீண்ட தூரப் பயணங்களினால் பல உயிர்கள் வழியிலேயே பிரியும் ஆபத்துக்கள் தொடர்வதாக பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்திருந்தார்.

நான் கடந்த 24.04.2025 அன்று மன்னார் மாவட்டத்திற்கு உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டிருந்த போது, "2026 ஆம் ஆண்டில் மன்னார் வைத்தியசாலைக்குக் கண்டிப்பாக சி.ரி ஸ்கானர் இயந்திரம் வழங்கப்படும்" என உத்தியோகபூர்வமாக உறுதியளித்திருந்தேன்.

மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலைக்கு சி.ரி ஸ்கானர் இயந்திரம் ஒன்றைக் கொள்வனவு செய்வதற்காக மதிப்பிடப்பட்டுள்ள ரூபா 250 மில்லியன் நிதியை, இந்த 2026 ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீட்டுக்குள் வழங்குவதற்கு அமைச்சரவை நடவடிக்கை எடுத்துள்ளது.

அதற்கமைய மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலைக்கான சி.ரி ஸ்கானர் இயந்திரம் இவ்வருடம் டிசம்பர் மாதத்திற்கு முன்னர் வழங்கப்படும். அத்துடன் வைத்தியசாலையில் நிலவும் ஆளணி பற்றாக்குறைக்கும் தீர்வு வழங்கப்படும் என அவர் தெரிவித்தார். (நி)

# சமூக ஊடகங்களை பயன்படுத்த சிறுவர்களுக்கு தடை-அரசாங்கம் பரிசீலனை

(கொழும்பு)

இலங்கையில் 16 வயதுக்கு உட்பட்ட சிறுவர்கள் சமூக ஊடகங்களை பயன்படுத்துவதற்கான அனுமதியை மட்டுப்படுத்துவது அல்லது தடை செய்வது குறித்து அரசாங்கம் அவதானம் செலுத்தி வருவதாக பிரதமர் ஹரிணி அமரசூரிய நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

இந்த யோசனை தொடர்பாக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையுடன் கலந்துரையாடல்கள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக அவர் குறிப்பிட்டார்.

மேலும் இந்த முயற்சியை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக அரசாங்கமும் வேல்ட் விஷன் அமைப்பும் இணைந்து விசேட வேலைத்திட்டம் ஒன்றை முன்னெடுப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகவும் பிரதமர் மேலும் தெரிவித்தார். (நி)



# முன்னாள் அமைச்சர் ஜகத் புஷ்பகுமார கைதாகி பிணையில் விடுவிப்பு

(கொழும்பு)

ஊழல் குற்றச்சாட்டில் முன்னாள் அமைச்சர் ஜகத் புஷ்பகுமார நேற்றுக் காலை இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக் குழுவால் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்டுள்ள முன்னாள் அமைச்சர் ஜகத் புஷ்பகுமார கொழும்பு நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட போது பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார்.

தேர்தல் காலங்களில் அரசுக்குச் சொந்தமான பெருந்தோட்ட நிறுவனங்களை தவறாகப் பயன்படுத்தியமை உள்ளிட்ட பல சம்பவங்கள் தொடர்பாகவே இவருக்கு எதிராக இந்த ஊழல் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன. (நி)

# டித்வா சூறாவளியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு 12,341 மில்லியன் ரூபா இழப்பீடு

(கொழும்பு)

கடந்த வருடம் ஏற்பட்ட "டித்வா" சூறாவளியினால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு, விவசாய மற்றும் கமநல காப்புறுதி சபையினால் இழப்பீட்டுத் தொகைகள் வழங்கப்பட்டுள்ளன.

அதற்கமைய, மொத்தம் 202,025 விவசாயிகளுக்கு 12,341.5 மில்லியன் ரூபா இழப்பீடாக வழங்கப்பட்டுள்ளதாக அந்தச் சபை அறிவித்துள்ளது.

கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் ஊடாக, முற்றாகப் பாதிக்கப்பட்ட 148,000 ஏக்கர் நெல் வயல்களுக்காக, 116,278 விவசாயிகளுக்கு 8,888.5 மில்லியன் ரூபா வழங்கப்பட்டுள்ளது.

விவசாய திணைக்களத்தின் ஊடாக மகாவலி வயங்கள், மாகாணங்கள் மற்றும் மாகாணங்களுக்கு இடையிலான பகுதிகளில் மக்காச்சோளம், மரக்கறிகள் மற்றும் ஏனைய பயிர்ச்செய்கைகளை மேற்கொண்ட 85,747 விவசாயிகளுக்கு 3,453 மில்லியன் ரூபா வழங்கப்பட்டுள்ளது.

இந்த இழப்பீட்டுத் திட்டத்தின் கீழ், பயிர்ச் செய்கைக்காக ஒரு ஹெக்டேயருக்கு 150,000 ரூபாயும், மக்காச்சோளம், மரக்கறிகள் மற்றும் ஏனைய பயிர்களில் ஒரு ஹெக்டேயருக்கு 200,000 ரூபாயும் வழங்கப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட விவசாயிகளின் வாழ்வாதாரத்தை மீளக் கட்டியெழுப்பும் நோக்கில் இந்த இழப்பீட்டுத் தொகை விடுவிக்கப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (நி)

# கட்டுப்பாட்டை இழந்து ஆற்றில் கவிழ்ந்த பேருந்து

(கொழும்பு)

நுவரெலியா பிரதான பேருந்து தரிப்பு நிலையத்தின் பின்புறமுள்ள பேருந்து தரிப்பு நிறுத்துமிடத்தில் நேற்று புதன்கிழமை பேருந்து ஒன்று கவிழ்ந்து விபத்துக்குள்ளானது.

நுவரெலியாவிலிருந்து சாந்திபுர நோக்கி தினமும் பயணம் செய்யும் குறித்த பேருந்து பயணிகளை இறக்கிவிட்டு, பேருந்து நிறுத்துமிடத்தில் தரித்து நிற்பதற்கு பின்னால் செலுத்திய போதே சாரதியின் கட்டுப்பாட்டை இழந்து, ஆற்று நீரில் கவிழ்ந்து இவ்விபத்து நேர்ந்துள்ளது.

அதிர்ஷ்டவசமாக இந்த விபத்தில் எவருக்கும் எவ்வித பாதிப்பும் ஏற்படவில்லை எனினும் பேருந்து பலத்த சேதம் அடைந்துள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சிறைச்சாலை மோதல்

# சுயாதீன விசாரணைக்குழு ஸ்தாபிப்பு; ஐ.நா.வரவேற்பு

(கொழும்பு)

நீர்கொழும்பு சிறைச்சாலையில் இடம்பெற்ற கொடூரமான மோதல் சம்பவங்கள் குறித்த பின்னணிச் சூழலை ஆராய்வதற்காக, சுயாதீனக் குழு ஒன்றை நியமிக்க இலங்கை அரசாங்கம் எடுத்துள்ள தீர்மானத்தை ஐக்கிய நாடுகள் சபை வரவேற்றுள்ளதுடன், இக்குழுவின் கண்டுபிடிப்புகள் நாட்டின் சிறைச்சாலை கட்டமைப்பில் ஆக்கபூர்வமான, நீடித்த சீர்திருத்தங்களுக்கு வழிவகுக்கும் எனவும் நம்பிக்கை வெளியிட்டுள்ளது.

நீர்கொழும்பு சிறைச்சாலையில் இரண்டு நாட்களாக தொடர்ந்து நடைபெற்ற வன்முறைகள் தொடர்பில் இலங்கைக்கான ஐக்கிய நாடுகள் சபையின் வதிவிட ஒருங்கிணைப்பாளர் மார்க் அன்றூ பிஞ்சே வெளியிட்டுள்ள அறிக்கையிலே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் புதிய அன்னசத்திர மண்டபம் திறப்பு விழா

(தெல்லிப்பழை)

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தின் புதிய அன்னசத்திர மண்டபம் திறப்பு விழா எதிர்வரும் 12 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தில் நடைபெறவுள்ளது.

தேவஸ்தான தலைவர் செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் சென்னை வேல்ஸ் பல்கலைக்கழக விரிவுரையாளர் செந்தமிழ் சுடர் கி.சிவகுமார் சிறப்புரை ஆற்றவுள்ளதுடன் கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. (8)

# இரத்ததான முகாம்

(மானிப்பாய்)

மானிப்பாய் கட்டுடை ஞான வைரவர் சனசமூக நிலையத்தின் 26 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு இரத்த தான முகாம் எதிர்வரும் 29 ஆம் திகதி புதன்கிழமை ஞானவைரவர் சனசமூக நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இரத்ததானம் வழங்க விரும்புவோர் தங்களது பெயர் மற்றும் விபரங்களை எதிர்வரும் 20 ஆம் திகதிக்கு முன்னர் பதிவு செய்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர்.

மேலதிக விபரங்களுக்கு 077 525 3729, 076 273 2906 எனும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளலாம். (8)

# அகில இலங்கை கம்பன் கழகத்தின் திருவள்ளுவர் திருக்கோயில் திறப்பு விழா

(கிளிநொச்சி)

அகில இலங்கை கம்பன் கழகத்தின் திருவள்ளுவர் திருக்கோயில் திறப்புவிழா எதிர்வரும் 12 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு கிளிநொச்சி ஜெயந்தி நகர் கம்பன் கலைக்கோயில் வளாகத்தில் தமிழ்நாடு கோவிலூர் வேதாந்தமட குருமுதல்வர் சீர்வளசீர் நாராயண ஞான தேசிக சுவாமிகளின் ஆசியுரையுடன் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

மேன்முறையீட்டு மேல்நீதிமன்ற முன்னாள் நீதிபதி ஜெ.விஸ்வநாதன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக தமிழ்நாடு 'விஜிபி' குழுமத் தலைவர் செவாலியர் கலைமாமணி டாக்டர் வி.ஜி.சந்தோசம் கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினராக தெற்காசிய ஸ்டான்டட் சார்ட்டட் வங்கி திருக்குறள் தேனீ வி.மகாலிங்கம், கௌரவ விருந்தினர்களாக ஸ்ரீ.ஐஸ்வர்ய லக்ஷ்மி தத்துவத் திருக்கோயில் தலைவர் செல்வி மாலா சபாரட்ணம், கொழும்பு கம்பன் கழகத் தலைவர் ஈ.கணேஷ் செல்வநாயகம், முல்லைத்தீவு அரச அதிபர் அ.உமாமகேஸ்வரன், வட மாகாண சபை முன்னாள் எதிர்கட்சித் தலைவர் சி.தவராஜா, கிளிநொச்சி பிரதேச சபை தவிசாளர் அ.வேழமாலிகிதன், "விவேகா" பயிற்சிநிலையத்தலைவர் கே.ரி.குருசாமி, வாழ் நாள் பேராசிரியர் அ.சண்முகதாஸ், முனைவர் திருமதி. மனோன்மணி சண்முகதாஸ், பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா, வாழ்நாள் பேராசிரியர் வ.மகேஸ்வரன், தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான தலைவர் கலாநிதி. ஆறு.திருமுருகன், வலம்புரி பத்திரிகையின் பிரதம ஆசிரியர் ந.விஜயசுந்தரம், பச்சிலைப் பள்ளி பிரதேச செயலாளர் த.ஜெயசீலன், கரைச்சி பிரதேச செயலாளர் த.முகுந்தன், பூபாலசிங்கம் புத்தகசாலை உரிமையாளர் பூ.ஸ்ரீதரசிங், எஸ்.வி.எம். நிறுவன உரிமையாளர் எஸ்.வி.எம் குணரட்னம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (8)

## இளைஞர்களின் கதிர்காம பாதயாத்திரை பச்சிலைப்பள்ளியைச் சென்றடைந்தது



(கரணவாய்)


தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் ஏற்பாட்டில், யாழ்ப்பாணம் தொண்டைமானாறு சந்நிதி முருகன் ஆலயத்திலிருந்து நேற்று அதிகாலை தொடங்கிய கதிர்காமம் நோக்கிய இளைஞர்களின் ஆன்மீகப் பாதயாத்திரை பச்சிலைப்பள்ளியை சென்றடைந்தது.

செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்தில் இருந்து ஐந்து இளைஞர்களுடன் இந்த ஆன்மீகப் பயணம் உத்தியோக பூர்வமாக ஆரம்பமானது.

பாதயாத்திரைக்குழுவினர் பச்சிலைப்பள்ளி, இரட்டைக் கேணிப் பகுதியில் அமைந்துள்ள கண்ணகை அம்மன் ஆலயத்தை காலை 11 மணிக்கு சென்றடைந்தனர்.

இதனைத் தொடர்ந்து, கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த மேலும் ஐந்து இளைஞர்கள் இந்த யாத்திரையில் தங்களை இணைத்துக் கொண்டு, கதிர்காமம் நோக்கிய தமது பயணத்தைத் தொடர்ந்தனர்.

இந்நிலையில் பாதயாத்திரைக் குழுவினரை வழியனுப்பும் நிகழ்வில் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் வடமாகாண பணிப்பாளர், பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளர், தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் முக்கிய அதிகாரிகள், பச்சிலைப் பள்ளி பிரதேச இளைஞர் கழகங்களின் சம்மேளன உறுப்பினர்கள், பாடசாலை மாணவர்கள் மற்றும் சிறுவர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (8-60)



நயினாதீவு அபிவிருத்திக் கழகமும் (பிரான்ஸ்), நயினாதீவு சமூக சக்தி குழுவும் இணைந்து நடாத்திய "மாணவர்களின் அறிவு மற்றும் ஆக்கத் திறன் போட்டியின் பரிசளிப்பு நிகழ்வும்", "சமூகப் பாதுகாப்பு பிரதிலாபத் திட்ட அங்குரார்ப்பண நிகழ்வும்" யாழ்/நயினாதீவு மகா வித்தியாலயத்தில் அண்மையில் நடைபெற்றது.

## முல்லைத்தீவில்

# போக்குவரத்து சீரின்மையால் நெருக்கடியில் மாணவர்கள்

(கண்டாவளை)

முல்லைத்தீவு மாவட்டத்தின் துணுக்காய் மற்றும் முல்லைத்தீவு ஆகிய இரு கல்வி வலயங்களின் கீழ் உள்ள 104 பாடசாலைகளில் 88 வரையான பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்களும் ஆசிரியர்களும் பெரும் போக்குவரத்து நெருக்கடிகளை எதிர்கொள்வதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தில் அண்மையில் இடம்பெற்ற போக்குவரத்து மற்றும் வீதி புனரமைப்பு தொடர்பான கலந்துரையாடலிலே இவ்விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக துணுக்காய் கல்வி வலயத்திலுள்ள மாந்தை கிழக்கு துணுக்காய் மற்றும் முல்லைத்தீவில் ஒட்டுசுட்டான் கரைதுறைப்பற்று ஆகிய கல்விக் கோட்டப் பாடசாலைகளே இவ்வாறு போக்குவரத்து நெருக்கடிகளை அதிகளவில் எதிர்கொள்கின்றன.

குறித்த இடங்களில் பேருந்து சேவைகள் இடம்பெறுவதில்லை.

வீதிகள் குன்றும் குழியுமாகக் காணப்படுவதால் வாகனங்களும் பயணிப்பதில்லை.

இவ்வாறான நிலையில் குறித்த பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்கள் கால் நடையாகவும் துவிச்சக்கர வண்டிகளிலும் சென்று தமது கல்வி நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

எனவே மாணவர்களின் நலனைக் கருத்தில் கொண்டு போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்தி தருமாறு பொது மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (8)

## கரைச்சி பிரதேச விவசாயக் குழுக்கூட்டம்

(தருமபுரம்)

கிளிநொச்சி கரைச்சி பிரதேச விவசாயக்குழுக்கூட்டம் கரைச்சி பிரதேச செயலாளர் த.முகுந்தன் தலைமையில் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

குறித்த கலந்துரையாடலில் கால்நடைவளர்ப்பு, நீர்ப்பாசனம், நெல்கொள்வனவு செயற்பாடுகள் உள்ளிட்ட விவசாயிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் ஆராயப்பட்டன.

நிகழ்வில் பிரதேச செயலக பிரதித்திட்டமிடல் பணிப்பாளர், உதவி பிரதேச செயலாளர், துறைசார்ந்த திணைக்களங்களின் உத்தியோகத்தர்கள், கமக்காரர் அமைப்புக்களின் பிரதிநிதிகள் என பலர் கலந்து கொண்டனர். (8-316)

# சாவகச்சேரியில் புகையிரதத்துடன் மோட்டார்சைக்கிள் மோதி விபத்து

## இருவர் காயம்



(சாவகச்சேரி)

சாவகச்சேரி அரசடி புகையிரத கடவைப் பகுதியில் நேற்று புதன்கிழமை மதியம் இடம்பெற்ற புகையிரத விபத்தில் தாயும் மகளும் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மோட்டார்சைக்கிளில் மகளை ஏற்றிக்கொண்டு கடவையை கடக்கும் போதே புகையிரதம் மோதியுள்ளது.

இதில் மகள் [illegible] சிறு காயங்களுடன் உயிர் தப்பியுள்ளார்.

தாய் தூக்கி வீசப்பட்டு கை மற்றும் கால் பகுதிகளில் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ் போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்.

விபத்தில் காயமடைந்த தாயார் 38 வயதான பிரதேச செயலக உத்தியோகத்தர் எனவும் மகளுக்கு 6 வயது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.


விபத்துத் தொடர்பான மேலதிக விசாரணைகளை சாவகச்சேரிப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

மேற்படி கடவையில் அபாய சமிக்ஞை விளக்கு உள்ள போதிலும் தடுப்புத் துலா இன்மையால் மேற்படி விபத்து இடம்பெற்றிருக்கலாம் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (8-30)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## ரணிலின் லண்டன் பயணம்

# விசாரணைகள் நிறைவு பெற்றதாக சி.ஐ.டி நீதிமன்றில் அறிவிப்பு



(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தனது பதவிக்காலத்தில் மேற்கொண்ட இலண்டன் பயணத்தின் போது, அரச நிதியை முறையற்ற விதத்தில் பயன்படுத்தியதாகக் கூறப்படும் வழக்கு, நேற்று கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

அதன்படி, குறித்த சம்பவம் தொடர்பான அனைத்து விசாரணைகளும் நிறைவடைந்துள்ளதாகவும், அதற்கான கோப்புகள் சட்டமாஅதிபரின் ஆலோசனையைப் பெறுவதற்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் குற்றப்புலனாய்வுத் திணைக்களம் நீதிமன்றத்திற்குத் தெரிவித்தது.

சட்டமா அதிபரின் ஆலோசனைக்கமைய குறித்த வழக்கினை எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 30 ஆம் திகதி வரை ஒத்திவைக்குமாறு நீதவான் பசன் அமரசேன உத்தரவிட்டார்.

இந்த நிலையில், முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க சார்பில் முன்னிலையான சட்டத்தரணி அனுஜ பிரேமரத்ன, பயணச் செலவில் பாதியளவு போக்குவரத்துக்கு செலவிடப்பட்டதாகவும், போக்குவரத்து வசதியை பிரித்தானிய அரசாங்கமே மேற்கொண்டதாகவும் தெரிவித்து, அதற்கான ஆவணங்களைச் சமர்ப்பித்தார்.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மற்றும் முன்னாள் ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க ஆகியோர் மீது, அரச நிதியைப் பயன்படுத்தி தனிப்பட்ட பயணத்தை மேற்கொண்டமை மற்றும் 1.5 கோடி ரூபாவிற்கும் அதிகமான நஷ்டத்தை அரசுக்கு ஏற்படுத்தியமை தொடர்பில் இந்தக் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

## மரண அறிவித்தல்

தோற்றம் 22 10 1951



மறைவு 06 07 2026

### திருமதி.இராஜமலர் கதிர்வேற்பிள்ளை

தாவடி தெற்கு வட ஸ்ரீபத்திரகாளி கோவிலடியை பூர்வீகமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி. இராஜமலர் (மல்லிகா) கதிர்வேற்பிள்ளை அவர்கள் 06.07.2026 அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் துன்னாலை மேற்கைச் சேர்ந்த Dr.கதிர்வேற்பிள்ளை அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான Dr.சுப்பிரமணியம் (கணேசு)- பூமணி தம்பதிகளின் அன்பு புதல்வியும் காலஞ்சென்றவர்களான தம்பிப்பிள்ளை- செல்லம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும் செல்வி. சனாதனா (கயனி) அவர்களின் பாசமிகு தாயாரும் காலஞ்சென்ற இராஜேந்திரா, காலஞ்சென்ற மகேந்திரா, சுபாசினி மகாரூபன்(கனடா), சுபோதினி இராஜ்(கனடா) ஆகியோரின் அன்பு சகோதரியும் மகேஸ்வரி மகேந்திரா(நெல்லியடி மத்திய மகா வித்தியாலய முன்னாள் அதிபர்), தங்கவேல் (அவுஸ்திரேலியா), ஞானவேல்(இலண்டன்), தனேஸ்வரி (அவுஸ்திரேலியா), சிவனேஸ்வரி (அமெரிக்கா), காலஞ்சென்ற இராஜேஸ்வரி ஆகியோரின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் 09.07.2026 வியாழக்கிழமை காலை 9.00 மணியிலிருந்து மாலை 9.00 மணிவரை அஞ்சலிக்காக கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் வைக்கப்பட்டு இறுதிக்கிரிகைகள் 10.07.2026 (வெள்ளிக்கிழமை) காலை 10 மணிக்கு ஆரம்பித்து தகனக்கிரிகை மதியம் 1.00 மணிக்கு தெகிவளை கல்கிசை பொது மயானத்தில் நடைபெறும்.

இவ் வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

(C-532)

தகவல்: Dr.கதிர்வேற்பிள்ளை (கணவர்) 077 766 7136.
சனாதனா (மகள்) 076 766 7136.

## மரண அறிவித்தல்

மலர்வு 1945.11.28

உதிர்வு 2026.07.05

### பூமலர் செல்வராசா



பூநகரி மட்டுவில் நாடு சோபாலபிட்டியை பிறப்பிடமாகவும் பூநகரி 4 ஆம் கட்டையை வதிவிடமாகவும் கொண்ட பூமலர் செல்வராசா அவர்கள் கடந்த 05.07.2026 ஞாயிற்றுக்கிழமை அன்று இறைபதம் எய்தினார்.

அன்னார் காலம் சென்றவர்களான சின்னத்தம்பி- இலட்சுமிப்பிள்ளை தம்பதிகளின் கடைசி மகளும் காலஞ்சென்றவர்களான நவரத்தினம், கற்பகமலர் மற்றும் பரமேஸ்வரியின் அன்புச் சகோதரியும் சிவகுமார் (கனடா), விஜயகுமாரி (நோர்வே), ரவிக்குமார்(இலண்டன்), சசிக்குமார் (இலண்டன்), நித்தியகுமாரி (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் நகுலன், சுதர்சன், வாசுகி, சிந்துஜா, ராதிகா ஆகியோரின் அன்பு மாமியாரும் நிதுஜா, மதுசா, திபிஜா, முகிலன், வானகி, சிதுர்ஜா, சானுஜா, அஜேஸ், கபிஜா, தினுஸ், அனுஷ், அபினிதா ஆகியோரின் பாசமிகு பேத்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை 10.07.2026 வெள்ளிக்கிழமை காலை 10 மணியளவில் 4 ஆம் கட்டை பூநகரியில் உள்ள அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஈனச்சி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

4 ஆம் கட்டை,
மன்னார் வீதி, பூநகரி.


(8001)

தகவல்-குடும்பத்தினர்
0094779543168

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## பாரதம்

## இந்தோனேசியாவில் பிரதமர் மோடிக்கு உயரிய விருது வழங்கி கௌரவிப்பு



(ஜகார்த்தா)

இந்திய பிரதமர் மோடிக்கு இந்தோனேசிய நாட்டின் உயரிய விருதான 'பிந்தாங் அடிபூர்ணா ஆப்தி ரிபப்ளிக் ஆப்' என்ற பதக்கம் வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளது.

இந்தோனேசியாவின் ஒற்றுமை, நிலைத்தன்மை மற்றும் செழிப்பு ஆகியவற்றிற்கு சிறப்பான பங்களிப்பை வழங்கிய தனி நபர்களுக்கு இவ்விருது வழங்கப்படுகிறது.

இந்த விருதுப் பதக்கத்தை மோடிக்கு இந்தோனேசிய ஜனாதிபதி பிரபோவோ சுபியாண்டோ அணிவித்தார்.

இது தொடர்பாக மோடி கூறும்போது, எனக்கு மிகுந்த அன்போடும் மரியாதையோடும் இந்தோனேசியாவின் உயரிய விருது வழங்கப்பட்டது.

இவ் விருது கோடிக்கணக்கான இந்தியர்களுக்கு சொந்தமானது.

இது இந்தோனேசிய மக்களின் உணர்வுகளையும் நமது இரு நாடுகளுக்கும் இடையிலான வரலாற்று சிறப்புமிக்க மற்றும் ஆழமான பிணைப்பையும் பிரதிபலிக்கிறது.

ஜனாதிபதி பிரபோவோ, இந்தோனேசிய அரசு மற்றும் அந்நாட்டு மக்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன் என்றார். (3)

# முறிந்தது ஒ

# மீண்டும் சூ

# அமெரிக்கா- ஈ

(டெஹ்ரான்)

**ஹார்முஸ் நீரிணையில் மூன்று வர்த்தகக் கப்பல்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல்களுக்குப் பதிலடியாக, ஈரான் மீது அமெரிக்கா சக்திவாய்ந்த வான்வழித் தாக்குதல்களை நடத்தியுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.**

முன்னதாக, சர்வதேச கடற்பாதையில் பயணித்த வர்த்தகக் கப்பல்களை இலக்காகக் கொண்ட தாக்குதல்களுக்கு கடுமையான பதிலடி கொடுக்கும் நோக்கிலேயே ஈரான் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாக அமெரிக்க மத்திய கட்டளைத் தலைமையகம் தெரிவித்துள்ளது.

எனினும், கடந்த மாதம் கையெழுத்திடப்பட்ட அமெரிக்கா மற்றும் ஈரான் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை இந்தத் தாக்குதல் மீறுவதாக ஈரானின் பிரதி வெளிவிவகார அமைச்சர் குற்றஞ்சாட்டியுள்ளதுடன், இதற்கு ஈரான் தீர்க்கமான நடவடிக்கைகளை எடுக்கும் என்றும் எச்சரித்துள்ளார்.

அத்துடன் ஈரானின் கெஷ்ம் தீவு, பந்தர் அப்பாஸ் மற்றும் சிரிக் ஆகிய பகுதிகள் மீது தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளதாக ஈரானின் அரச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

தாக்குதல்களில் பலர் காயமடைந்துள்ள போதிலும், உயிரிழப்புகள் எதுவும் பதிவாகவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையில், ஹார்முஸ் நீரிணையில் இடம்பெற்ற

## கிரீன்லாந்து அமெரிக்காவின் கட்டுப்பாட்டிற்குள் வர வேண்டும்

### நேட்டோ மாநாட்டுக்கு முன் ட்ரம்ப் அதிரடி



(வோஷிங்டன்)

கிரீன்லாந்து தீவானது டென்மார்க்கின் கீழ் இருக்கக் கூடாது என்றும், அது அமெரிக்காவின் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரப்பட வேண்டும் என்றும் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் வலியுறுத்தியுள்ளார். துருக்கி தலைநகர் அங்காராவில் நடைபெற்று வரும் நேட்டோ உச்சிமாநாட்டில் பங்கேற்றுள்ள நிலையில் அவர் இந்த கருத்தை தெரிவித்துள்ளார்.

டென்மார்க்கின் சுயாட்சி பெற்ற பிரதேசமான கிரீன்லாந்தை அமெரிக்கா தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர வேண்டும் என்ற ட்ரம்பின் இந்த அறிவிப்பு, நேட்டோ அமைப்பின் ஸ்தாபக நாடுகளான அமெரிக்கா மற்றும் டென்மார்க்குக்கு இடையே புதிய இராஜதந்திர பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

துருக்கி ஜனாதிபதி தையிப் எர்டோகனுடனான சந்திப்பின் போது செய்தியாளர்களிடம் பேசிய ட்ரம்ப், "கிரீன்லாந்து அமெரிக்காவால் கட்டுப்படுத்தப்பட வேண்டும், டென்மார்க்கினால் அல்ல. இந்த விவகாரமே நேட்டோ அமைப்புடனான எமது உறவில் விரிசலை ஏற்படுத்தியது" எனக் குறிப்பிட்டார்.

"கிரீன்லாந்தால் டென்மார்க்கிற்கு எந்த பயனும் இல்லை, அதனை மேம்படுத்த டென்மார்க் பணம் செலவிடுவதும் இல்லை. ஆனால், கிரீன்லாந்து அமெரிக்காவுக்கு மிக முக்கியமான ஒரு பகுதியாகும்.

தற்போது அதனைச் சுற்றி சீன மற்றும் ரஷ்ய கப்பல்கள் சூழ்ந்துள்ளன, இதனை எம்மால் அனுமதிக்க முடியாது.

ரஷ்ய அச்சுறுத்தலில் இருந்து அவர்களைப் பாதுகாக்க நாம் இவ்வளவு பணம் செலவழிக்கும் போது, அவர்கள் எமது திட்டத்துக்கு உடன்படமறுக்கிறார்கள்" என்று சாடினார்.

எவ்வாறாயினும், கிரீன்லாந்து விவகாரம் தொடர்பாக டென்மார்க் மற்றும் கிரீன்லாந்து அதிகாரிகளுடன் மாதாந்தம் பேச்சு வார்த்தைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் ரூபியோ கடந்த ஜூன் மாதம் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (3)

## நடுவானில் திடீரென ப துண்டிக்கப்பட்டுள்




(அபுதாபி)

ஐக்கிய அரபு அமீரகத்திலிருந்து புறப்பட்ட கார்கோ (சரக்கு) விமானம் ஒன்று, பாகிஸ்தானின், கராச்சிக்கு அருகே செவ்வாய்க்கிழமை இரவு திடீரெனக் கீழே இறங்கியதுடன் விமானப் போக்குவரத்துக் கட்டுப் பாட்டாளர்களுடனான தொடர்பையும் இழந்த நிலையில் மாயமானதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்த விமானத்தில் ஐந்து பணிக் குழு உறுப்பினர்கள் இருந்ததாக தெரி விக்கப்பட்டுள்ளது.


இதையடுத்து அரேபியக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

## ...ஒப்பந்தம்?

# ...டுபிடிக்கும் ...ரான் மோதல்!



...கப்பல் தாக்குதல்கள் முற்றிலும் ஏற்றுக்கொள்ள முடியாதவை எனக் குறிப்பிட்டிருந்த அமெரிக்கா, அதனால் கடுமையான விளைவுகள் ஏற்படும் என முன்னரே எச்சரித்திருந்தது.

மேலும், தாக்குதல்களுக்கு முன்னதாக, ஈரான் மீதான எண்ணெய் தடைகளில் வழங்கியிருந்த தற்காலிக தளர்வை அமெரிக்க நிதிய மைச்சு நேற்று முன்தினம் இரத்து செய்துள்ளது.


எனினும், இது புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மீறும் நடவடிக்கை என ஈரானின் வெளிவிவகார அமைச்சு குற்றஞ்சாட்டியுள்ளது.

அத்துடன், இந்த நடவடிக்கை அமெரிக்க அரசின் நம்பகத்தன்மையின்மை, முரண்பாடான அணுகுமுறை மற்றும் நல்லெண்ணமின்மையை வெளிப்படுத்துவதாகவும் ஈரான் தெரிவித்துள்ளது.

எவ்வாறாயினும், தேசிய நலன்களையும் தேசியப் பாதுகாப்பையும் உறுதிப்படுத்தத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்வோம் என்றும் ஈரான் தெரிவித்துள்ளது. (3)

# கியூபாவில் மின்சார கட்டமைப்பு செயலிழப்பு

## தீவிரமடையும் எரிசக்தி நெருக்கடி



(ஹவானா)

கியூபாவில் உள்ள ஒட்டுமொத்த தேசிய மின்சாரக் கட்டமைப்பும் முற்றிலும் செயலிழந்துள்ளதாகவும், இதனால், நாடு முழுவதும் முழுமையான மின்விநியோகத் தடை ஏற்பட்டு பொதுமக்கள் கடுமையான அவதிக்குள்ளாகியுள்ளதாகவும் அந்நாட்டு எரிசக்தி அமைச்சகம் தெரிவித்துள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்த திடீர் முடக்கத்திற்கான துல்லியமான காரணம் என்ன என்பது குறித்து கியூபாவின் மின்சாரக் கட்டமைப்பை இயக்குபவர்கள் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.

இதற்கிடையில், வைத்தியசாலைகள் மற்றும் அத்தியாவசிய பொதுச் சேவைகளைப் பராமரிப்பதற்காக அவசரகால "மைக்ரோசிஸ் டம்ஸ்" செயற்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளதாக அந்நாட்டு எரிசக்தி அமைச்சர் விசென்டே டி லா ஓ லெவி தெரிவித்துள்ளார்.

கியூபாவின் தற்போதைய மின்சார நெருக்கடிக்கு, அமெரிக்கா விதித்துள்ள கடுமையான பொருளாதாரத் தடைகளே முக்கியக் காரணம் என்று கியூபா அரசு குற்றம் சாட்டியுள்ளது.(3)

# ...மாயமான விமானம்; ...ள்ள தொடர்புகள்

## ...தேடுதல் வேட்டை தீவிரம்




...கடலில் தேடுதல் மற்றும் மீட்புப் பணிகள் நடைபெற்று வருவதாகப் பாகிஸ்தானின் விமான நிலைய ஆணையகம் 'எக்ஸ்' தளத்தில் பதிவிட்டது.

விமானம் மாயமானதற்கான காரணம் உடனடியாகத் தெரியவரவில்லை.

ஐக்கிய அரபு அமீரகத்தின் ஷார்ஜாவிலிருந்து கராச்சிக்கு சென்று கொண்டிருந்த, சரக்கு விமானமான கராச்சியைச் சேர்ந்த 'கே2 ஏர்வேஸ்' நிறுவனத்தின் போயிங் 737 விமானமே இவ்வாறு காணாமல் போயுள்ளது.(3)

# சீனாவில் கொட்டித் தீர்க்கும் கனமழை; பூங்காவிலிருந்து மாயமான 900 பாம்புகள்

(பீஜிங்)

சீனா முழுவதும் வரலாறு காணாத அளவில் கனமழை கொட்டி தீர்த்து வருகிறது.

இதனால் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கினால் 20 பேர் உயிரிழந்துள்ளதுடன், நூற்றுக் கணக்கானோர் காயமடைந்தனர்.

அதுமட்டுமின்றி ஆயிரக் கணக்கானோர் இடம் பெயர்ந்துள்ளனர்.

இந்நிலையில் மழையால் சேதமடைந்த பூங்காவில் இருந்து 900 பாம்புகள் தப்பிச் சென்றதால் பொதுமக்கள் அச்சம் அடைந்துள்ளனர்.

## பீதியில் மக்கள்



தப்பிய பாம்புகளில் பெரும் பாலானவை விஷமற்றவை என்றாலும், அவற்றை மீட்கும் பணியில் சிறப்புப் படைகள் களமிறக்கப்பட்டுள்ளன.


அத்துடன் இந்தப் புயல்களால் 20 இற்கும் மேற்பட்ட வீடுகள் இடிந்து விழுந்துள்ளன. அதேநேரத்தில் 4,800 வீடுகள் சேதமடைந்தன. சீனாவின் 62 இற்கும் மேற்பட்ட முக்கிய நதிகளில் வெள்ளநீர் அபாயக் கட்டத்தைக் கடந்தது.

மேலும் 54 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

வெள்ளப் பாதிப்புகள் குறித்துப் பேசிய ஜனாதிபதி ஷி ஜின்பிங், "பாதிக்கப்பட்ட பகுதிகளில் மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளை முழு வீச்சில் முடுக்கிவிட வேண்டும் எனவும் காயம் அடைந்தவர்களுக்கு தங்கு தடையின்றி உரிய மருத்துவச் சிகிச்சை அளிக்கப்பட வேண்டும் எனவும் மக்களின் உயிர், உடைமைகளுக்குப் பாதுகாப்பு அளிப்பதை அதிகாரிகள் உறுதி செய்ய வேண்டும்" எனவும் அறிவுறுத்தினார். (3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# இலங்கைக்கு கடத்த முயன்ற 120 ஜோடிப் புறாக்கள் பறிமுதல்



(மன்னார்)

இலங்கைக்குக் கடத்தும் நோக்கில் கடற்கரைக்கு வாகனத்தில் கொண்டு வரப்பட்ட 120 ஜோடிப் புறாக்களைத் தமிழகப் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

தமிழகத்தின் இராமேஸ்வரம் ஊடாக கடல்வழியாக இலங்கைக்கு இப்புறாக்களைக் கடத்துவதற்காக, பாம்பன் பாலம் வழியாக வாகனத்தில் கொண்டு சென்றபோதே பொலிஸார் இவற்றை இடைமறித்துக் கைப்பற்றியுள்ளனர்.

இந்தியாவின் தமிழகக் கடற்கரையோரம் ஊடாக அண்மைக்காலமாக பெருமளவிலான பறவைகள் இலங்கைக்குக் கடத்தப்படுகின்றன என்று பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்கு இரகசியத் தகவல் கிடைத்துள்ளது. இந்தத் தகவலின் அடிப்படையில் முன்னெடுக்கப்பட்ட தீவிர வாகனச் சோதனையின் போதே இந்தப் புறாக்கள் மீட்கப்பட்டுள்ளன.

இதன்போது, கடத்தலுக்குப் பயன்படுத்தப்பட்ட வாகனத்துடன் 120 ஜோடிப் புறாக்களையும் கைப்பற்றிய பொலிஸார், பறவைகளைக் கடத்த முயன்ற குற்றச்சாட்டில் இரண்டு சந்தேகநபர்களையும் கைது செய்துள்ளனர். (8-33)


## கல்யாணமாலை

### சர்வதேச இலவச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்:உத்தரட்டாதி<br>1இல்செவ்<br>கி-பா-54<br>உயரம்:5"7"<br>தகைமை/தொழில் :Bsc, Msc, Engineer (pvt)<br>எதிர்பார்ப்பு: விவாகரத்தானவர்<br>தொ.இ: B/16146 | பிறப்பு-1978-இந்து<br>நட்சத்திரம் உத்தரட்டாதி<br>கி-பா-50<br>உயரம்: 5"1"<br>தகைமை/தொழில்:Bsc,Msc,Data Analyst<br>எதிர்பார்ப்பு: தகுதியானஆண். விவாகரத்தானவர்<br>தொ.இ: G/16547 |
| பிறப்பு:1994- இந்து<br>நட்சத்திரம்: உத்தரட்டாதி<br>உயரம்: 5"5"<br>தகைமை/தொழில்: A/L, Shop(பிரான்ஸ்)<br>எதிர்பார்ப்பு: தகுதியான பெண்<br>தொ.இ:B/7069 | பிறப்பு-1989-இந்து<br>நட்சத்திரம்-அச்சுவினி<br>2இல்செவ்<br>கி-பா-37<br>உயரம்: 5"<br>தகைமை/தொழில்: Diploma, Supervisor<br>எதிர்பார்ப்பு: விவாகரத்தானவர்<br>தொ.இ: G/16551 |
| பிறப்பு:1993-இந்து<br>நட்சத்திரம்-மிருகசீரிடம்<br>8இல்செவ்<br>கி-பா-63<br>உயரம்:5"9"<br>தகைமை/தொழில்-Bsc, Engineer<br>எதிர்பார்ப்பு: தகுதியான பெண்<br>தொ.இ:B/7070 | பிறப்பு-1995-இந்து<br>நட்சத்திரம்-பூரம்<br>2இல்செவ்<br>கி-பா-39 1/2<br>உயரம்-5"6"<br>தகைமை/தொழில்:Bsc,PHD, Engineer (Australia)<br>எதிர்பார்ப்பு: Doctor, Engineer<br>தொ.இ: G/16552 |
| பிறப்பு: 1996 இந்து<br>நட்சத்திரம்:ரேவதி<br>கி-பா-22 1/4<br>உயரம்:5"<br>தகைமை/தொழில் -A/L, இயந்திர இயக்குநர்<br>எதிர்பார்ப்பு: தகுதியான பெண்<br>தொ.இ:B/17071 | பிறப்பு-1987-இந்து<br>நட்சத்திரம்-திருவாதிரை<br>கி-பா-43 3/4<br>உயரம்-5"6"<br>தகைமை/தொழில்:BE, Engineer (Newzealand)<br>எதிர்பார்ப்பு: விவாகரத்தானவர்<br>தொ.இ: G/14826 |
| பிறப்பு: 1987- இந்து<br>நட்சத்திரம்: விசாகம்<br>2இல்செவ்<br>கி-பா-25<br>உயரம்:5"6"<br>தகைமை/தொழில்: Degree<br>எதிர்பார்ப்பு: தகுதியான பெண்<br>தொ.இ:B/17074 | பிறப்பு-1985 இந்து<br>நட்சத்திரம் : பூரட்டாதி<br>உயரம்: 5"<br>தகைமை/தொழில்: BCom, Auditor<br>எதிர்பார்ப்பு : சைவபோசனம்<br>தொ.இ: G/15361 |

இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 076 097 3120
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 4.45 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


## இன்று ஒரு தகவல் 612



தென்கச்சி கோ.சுவாமிநாதன்

# உதவி

"எனக்கு ஒரு உதவி செய்ய வேண்டும்" என்று நம்மைப் பார்த்து ஒருத்தர் கேட்கிறார் என்று வைத்துக் கொள்ளுங்கள். உடனே நாம் அவரைப் பார்த்து "என்ன உதவி?" என்று கேட்போம். இதுதான் சராசரி மனிதர்களின் இயல்பு.

ஆனால் ஒருத்தர் "எனக்கு ஒரு உதவி செய்ய வேண்டும்" என்று கேட்டவுடனேயே என்ன என்று கூட கேட்காமல் "சரி செய்கிறேன்!" என்று ஒப்புக் கொள்வது இருக்கிறது பாருங்கள் அது கொஞ்சம் அபூர்வம்.

அந்தக் காலத்தில் ஒருத்தர் இருந்தார். அவர் எப்படி தெரியுமா? உதவி கேட்பவர்கள் நல்லவர்களா கெட்டவர்களா என்று கூட பார்ப்பதில்லை.

தனக்கு நன்மையா, தீமையா என்று கூட பார்ப்பதில்லை. உதவி செய்கிறேன் என்று புறப்பட்டு விடுவார்.

அவர் யார் தெரியுமா? அவர் தான் நளச்சக்கரவர்த்தி. அவர் மாதிரி நாமும் உதவி கேட்பவர்களுக்கு உடனே உதவி செய்வதற்குத் தயாராக இருக்க வேண்டும். என்று சொன்னார் ஒரு ஆன்மிக பேச்சாளர்.

நளசரித்திரத்தை அவர் சொல்லிக் கொண்டிருந்தார்.

இந்திரன், அக்னி, வருணன், யமன் இவர்கள் நான்கு பேரும் நளனைப் பார்த்து "எங்களுக்கு நீ உதவி செய்ய வேண்டும் . எங்களுக்காக நீ தூது போக வேண்டும்" என்று கேட்கிறார்கள்.

"யாரிடம் தூது போக வேண்டும்? என்ன காரியத்திற்காக போக வேண்டும்?" என்று கேட்க வேண்டும் அல்லவா?

நளன் அப்படி கேட்கவே இல்லை. உடனே "சரி" என்று ஒப்புக் கொள்கிறான். அதன் பின்னர் அவர்கள் விவரம் சொல்கிறார்கள். என்ன உதவி, யாரிடம் தூது போகவேண்டும் என்ற விவரத்தைச் சொல்கிறார்கள். நளனுக்கும் பின்னர் தான் புரிகிறது.

எந்த தமயந்தியை இவன் காதலித்தானோ எந்த தமயந்தியின் சுயம் வரத்துக்காக இவன் போய்க் கொண்டிருக்கிறானோ அந்த தமயந்தியைப் பார்த்து,

தங்களுக்காக அவளிடம் வாதாட வேண்டும் ,பேச வேண்டும். தங்களில் ஒருத்தரைக் கல்யாணம் பண்ணும் படியாக கேட்க வேண்டும்.! என்று அவர்கள் நான்கு பேரும் நளனிடம் கேட்கிறார்கள்.

இதைக் கேட்டதும் நளன் கொஞ்சம் கூட முகம் சுளிக்க வில்லை. பதற்றப் படவில்லை. நேராக தமயந்தியிடம் போகிறான்.

இந்திரன், அக்னி, வருணன், யமன் இவர்களுடைய சிறப்புகளை எடுத்துச் சொல்கிறான். இவர்களில் ஒருத்தரைக் கல்யாணம் செய்யும்படி மன்றாடுகிறான்.

ஆனால் இதற்கு தமயந்தி சம்மதிக்கவில்லை. சுயம்வரம் நடக்கிறது. அவள் நளனைத் தேர்ந்தெடுக்கிறாள். அந்த நான்கு பேரும் நளனுக்கு நிறைய வரங்கள் எல்லாம் கொடுக்கிறார்கள். இப்படிப் போகிறது கதை.

இதில் நாம் கவனிக்க வேண்டியது என்ன என்றால் "உதவி" என்று கேட்டவுடனே "என்ன உதவி" என்று கூட கேட்காமல் "சரி செய்கிறேன்" என்று சொன்னான் பாருங்கள். அதைக் கொஞ்சம் சிந்திக்க வேண்டும்.

செய்கிறேன் என்று ஒப்புக் கொண்ட பிறகு, அது என்ன "உதவி" என்று தெரிந்தும் முகம் சுளிக்காமல் அதை செய்தான் பாருங்கள். அதைக் கொஞ்சம் சிந்திக்க வேண்டும்.

நம் ஆள் ஒருத்தன் ஒரு நண்பனைத் தேடிப் போனான். எனக்கு ஒரு உதவி என்றான். சரி சொல் என்றான்.

"இப்போது உன்னிடம் இரண்டு கார்கள் இருந்தால் என்ன செய்வாய்?" என்றான்.

"உடனே அதில் ஒன்றை உன்னிடம் கொடுத்து விடுவேன்!" என்றான்.

"உன்னிடம் இரண்டு பங்களா இருந்தால்?" என்றான்.

"உடனே அதில் ஒன்றை உன்னிடம் கொடுத்து விடுவேன்!" என்றான்.

"உன்னிடம் இரண்டு பேனா இருந்தால்?" என்றான்.

"அதில் ஒரு பேனாவை உன்னிடம் கொடுக்க மாட்டேன்!" என்றான்.

"ஏன்டா அப்படிச் சொல்கிறாய்?" என்றான்.

"ஏன் என்றால் இப்போது நிஜமாகவே என்னிடம் இரண்டு பேனா இருக்கிறது. அதனால் தான் இப்படிச் சொல்கிறேன்!" என்றான்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# அராலி முருகமூர்த்தி வித்தியாலயத்தில் போதைப்பொருள் தடுப்பு மையம் திறப்பு



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் அராலி முருகமூர்த்தி வித்தியாலயத்தில் போதைப்பொருள் தடுப்பு மற்றும் திறன் விருத்தியுடன் கூடிய சுகாதார மேம்பாட்டு மையம் நேற்றையதினம் திறந்து வைக்கப்பட்டது.

யாழ்.பல்கலைக்கழக குடும்ப மற்றும் சமுதாய மருத்துவத் துறைத் தலைவர் பேராசிரியர் எஸ்.குமரன் மற்றும் பொன்னாலை வரதராஜப் பெருமாள் வித்தியாலய அதிபர் தி.தவரத்தினம் ஆகியோர் இணைந்து குறித்த மையத்தை திறந்து வைத்தனர்.

மனிதநேய தொண்டர் நிறுவனம் இதற்கான நிதியுதவிகளை வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (8)

# இரத்ததான முகாம்

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு சமுர்த்தி வங்கியின் இரத்ததான முகாம் இன்று வியாழக்கிழமை காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 2 மணிவரை சமுர்த்தி வங்கி வளாகத்தில் நடைபெறவுள்ளது.

குருதிக் கொடையாளர்கள் கலந்து கொண்டு இரத்ததானம் வழங்குமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (8)

## மருதங்கேணியில்

# காணி சுவீகரிப்பைத் தடுக்க அனைவரும் அணி திரளுங்கள்!

### காணி உரிமைக்கான மக்கள் இயக்கம் அழைப்பு

(கரணவாய்)

யாழ்ப்பாணம் வடமராட்சி கிழக்கு மருதங்கேணி பகுதியில் தனியாருக்கு சொந்தமான 25 ஏக்கர் காணி சுவீகரிப்பு நடவடிக்கைகள் இன்றையதினம் இடம் பெறவுள்ளதாகவும் அதனை தடுத்து நிறுத்துவதற்கு அனைவரையும் ஒன்று திரளுமாறும், காணி உரிமைக்கான மக்கள் இயக்கத்தின் தலைவர் அழைப்பு விடுத்துள்ளார்.

மக்களின் காணிகள் மக்களுக்கு வழங்கப்பட வேண்டும். மக்களின் காணிகளை அபகரிப்பதை நாம் ஒரு நாளும் ஏற்றுக்கொள்ள மாட்டோம்.

இந்த அரசாங்கமும் மக்களின் காணிகளை மக்களுக்கு வழங்க வேண்டும் என்று தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிட்டிருந்தது.

ஆனால் இதுவரை எந்தக் காணிகளும் விடுவிக்கப்படவில்லை. மக்களின் காணிகளை மக்களிற்கு பெற்றுக் கொடுக்க வேண்டும் என்றும் இதற்காக இன்றைய தினம் மருதங்கேணியில் அளவீடு செய்யப்படுகின்ற காணியை அளவீடு செய்யவிடாமல் தடுப்பதற்காக அனைவரையும் ஒன்று திரளுமாறு அழைப்பு விடுத்துள்ளார். (8-60)

# சந்தைகளில் நேற்றைய விலை

பொருளாதார சந்தைவிலைகள்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி | மட்டுவில் | வவுனியா |
|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 300 | 200 | 300 | 250 | 300 | 200 | 200 |
| உருளைக்கிழங்கு | 220 | 220 | 200 | -- | 240 | -- | 350 |
| பச்சைமிளகாய் | 600 | 600 | 600 | 550 | 600 | 600 | 800 |
| தக்காளி | 300 | 400 | 500 | 620 | 400 | 400 | 350 |
| மரவள்ளிக்கிழங்கு | 200 | 250 | 200 | 150 | 240 | 200 | 140 |
| கோவா | 250 | 250 | 300 | 250 | 240 | 200 | 160 |
| கரட் | 400 | 360 | 400 | 380 | 400 | 360 | 350 |
| பூசணி | 160 | 200 | 200 | 150 | 200 | 180 | 140 |
| புடோல் | 100 | 200 | 200 | 200 | 200 | 150 | 180 |
| வாழைக்காய் | 150 | 150 | 250 | 200 | 160 | 100 | 120 |
| சின்ன வெங்காயம் | 400 | 380 | 300 | 400 | 400 | -- | 380 |
| பெரிய வெங்காயம் | 250 | 220 | 200 | -- | 200 | 200 | -- |
| பாகற்காய் | 800 | 1000 | 800 | 800 | 1200 | 600 | 900 |
| வெண்டக்காய் | 200 | 200 | 200 | 200 | 400 | 200 | 200 |
| கருணைக் கிழங்கு | 300 | 350 | 300 | 400 | 400 | -- | 350 |
| பயற்றங்காய் | 300 | 300 | 400 | 350 | 350 | 400 | 150 |
| லீக்ஸ் | 250 | 400 | 300 | 350 | 300 | 300 | 260 |
| பீற்றூட் | 400 | 450 | 500 | 400 | 400 | 400 | 450 |
| கறிமிளகாய் | 400 | 500 | 400 | 500 | 400 | 400 | 400 |
| முருங்கைக்காய் | 500 | 550 | 400 | 350 | 500 | 400 | 450 |
| போஞ்சி | 600 | 400 | 500 | 600 | 400 | 400 | 400 |
| கத்தரிதம்புள்ள | 250 | 120 | 200 | -- | 280 | -- | -- |
| கீரை - 1 பிடி | 100 | 80 | 150 | 80 | 80 | -- | 60 |
| தேசிக்காய் | 400 | 250 | 400 | 300 | 450 | 300 | 225 |
| தேங்காய் (ஒன்று) | 100 | 120 | 150 | 110 | 100-140 | -- | 90 |
| இராசவள்ளி | 400 | 450 | 400 | 350 | 400 | -- | 300 |
| வெங்காயப்பூ | 350 | 350 | 400 | 300 | 500 | -- | -- |
| முள்ளங்கி | 200 | 160 | 200 | 180 | 200 | 200 | 120 |
| பொன்னாங்காணி | 100 | 100 | 150 | -- | 60 | -- | 50 |
| வல்லாரை | 80 | 70 | 100 | -- | 100 | -- | 60 |
| ஈரப்பலா | 200 | 200 | 100 | -- | 250 | -- | -- |


# இராசிபலன்

09.07.2026
ஆனி 25, வியாழக்கிழமை
நவமி காலை 6.23 மணிவரை


தசமி பின்னிரவு 4.21 மணிவரை
அச்சுவினி முற்கல் 11.32 மணிவரை
சுப நேரம் 7.28-8.58 மணிவரை
இராகுகாலம் 1.28-2.58 மணிவரை

அமிர்த சித்தம்
சந்திராஷ்டமம்: சித்திரை

வளவன்





தேக நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், விருந்துகளில் கலந்து கொள்ள அழைப்புக்கள் வந்து சேரலாம், சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள், போசன சுகமுண்டு.




சேமிப்பில் சிறிது கரையலாம், விருப்பங்கள் நிறைவேற இஷ்ட தெய்வத்தை வழிபட வேண்டிய நாள், பயணங்களால் அலைச்சல்கள் ஏற்படலாம், முயற்சிகளில் சிறு தாமதம் ஏற்படலாம்.




குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம் பெறலாம், இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், வருமானம் திருப்தி தரும்.





குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், தொட்ட காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம்.





தொழிலில் ஏட்டிக்குப் போட்டியாக செயற்பட்டவர்கள் மனம் மாறுவர், சிக்கல்கள் விலகி சிறப்புக்கள் கூடும், பேச்சில் இனிமை தென்படும், வீட்டை சிரமைப்பதில் அக்கறை கூடும்.




குடும்பப் பெரியவர்கள் உங்களின் செயற்பாடுகளில் குறை கண்டு கூறலாம், பயணங்களின் போது பொருட்களில் கவனம் தேவை, கவலைகள் தீர இஷ்ட தெய்வத்தை வழிபட வேண்டிய நாள்.





வெளியூர் பயணங்களால் நன்மையுண்டு, எடுத்த காரியங்களில் எளிதில் முன்னேற்றம் காணும் நாள், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள், கௌரவமான நாள்.





திட்டமிட்ட காரியங்களில் முன்னேற்றமுண்டு, செய்தொழில் மேன்மையுண்டு, பொதுவாழ்வில் புகழ் கூடும், செயற்பாடுகளில் உற்சாகம் காட்டுவீர்கள்.




கேளிக்கை கொண்டாட்டங்களில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, இல்லம் தேடி இனிய செய்திகள் வந்து சேரலாம், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்.




பொதுவாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும், பெற்றோர் நலனில் அக்கறை காட்டுவீர்கள், அதிஷ்ட வாய்ப்புக்கள் உங்களைத் தேடி வரலாம்.




பொல்லாதவர்கள் உங்களை விட்டு விலகலாம், குடும்ப பொறுப்புக்கள் கூடும், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள், காரிய அனுகூலமுண்டு.




எதிர்பாராத தனவரவுகள் வந்து சேரலாம், பக்க பலமாக இருப்பவர்களின் எண்ணிக்கை கூடும், சுபகாரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் காணும் நாள், போசன சுகமுண்டு.

பகைவனின் புன்னகையை விட நண்பனின் சினம் மேலானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media


## கல்கியின் பொன்னியின் செல்வன்

பாகம் - 5

காவியத் தொடர்

1083





தஞ்சைக்கு மேற்கே பலமான மழை பெய்தபடியால் காவேரியிலும் கொள்ளிடத்திலும் அவற்றின் கிளை நதிகளிலும் பெரு வெள்ளம் வந்து பல இடங்களில் கரை உடைத்துக் கொண்டதாகவும், ஒரே வெள்ளக் காடாக இருப்பதால் மேற்கொண்டு பிரயாணத்தைத் தொடர்ந்து நடத்துவது கஷ்டமாயிருக்குமென்றும் சொன்னார்கள். இரண்டு நாள் திருஆரூரில், தங்கி, வெள்ளம் வடிந்த பிறகு புறப்படுவது உசிதம் என்று தெரிவித்தார்கள். இதற்கு இளவரசர் இஷ்டப்படவில்லை. தஞ்சையை உடனே அடைய வேண்டுமென்ற பரபரப்பு அவர் உள்ளத்தில் குடிகொண்டிருந்தது.

நதி உடைப்புக்களும், வெள்ளமும் அவருடைய அந்த ஆர்வத்தைத் தடை செய்துவிடக்கூடுமா, என்ன? ஆம் இத்தனை ஜனங்களும் பரிவாரங்களும் புடை சூழப் போவதாயிருந்தால் பிரயாணம் தடைப்படத்தான் செய்யும். தாம் மட்டும் தனியே யானை மீது ஏறிச் சென்றால் பிரயாணம் தடைப்பட வேண்டிய அவசியமில்லை. யானைக்கு அண்டாத ஆழம் உடைய நதி எதுவும் தஞ்சைக்குப் போகும் வழியில் இல்லை. அப்படியிருந்தாலும் இளவரசருக்கு அதைப்பற்றிக் கவலை கிடையாது.

தண்ணீரிடத்தில் அவருக்கு எப்போதும் அச்சம் ஏற்பட்டதில்லை. பொன்னி நதி அவருடைய அன்னைக்கு மேலான அன்புடையவள் ஆயிற்றே? சின்னஞ்சிறு குழந்தைப் பிராயத்தில் தான் முழுகிப் போகாமல் காப்பாற்றிய காவேரித் தாய் இப்போது தன்னைக் காப்பாற்ற மாட்டாளா?

இந்தப் பெருந் திரளான மக்களிடமிருந்து எப்படித் தப்பித்துச் செல்வது என்பதுதான் கேள்வி. அயோத்தியின் மக்களிடமிருந்து இராமர் இரவுக்கிரவே தப்பிச் சென்றது பொன்னியின் செல்வருக்கு நினைவு வந்தது. அவ்விதமே அவரும் இரவில் ஜனங்கள் தூங்கும் சமயத்தில் போய்விட்டால் என்ன? எல்லாவற்றுக்கும் யானைப் பாகனிடம் எந்த நேரத்திலும் புறப்பட ஆயத்தமாயிருக்கும்படி சொல்லி வைப்பது நல்லது.

இந்த எண்ணம் தோன்றியதும் யானைப் பாகனை அழைத்து வரும்படி அரண்மனைச் சேவகனுக்கு இளவரசர் கட்டளையிட்டார். சேவகன் வீதிக்குச் சென்று பார்த்துவிட்டு உடனே திரும்பி வந்தான். யானை மட்டும் வாசலில் கட்டியிருக்கிறதென்றும் யானைப்பாகனைக் காணோம் என்றும் தெரிவித்தான்.

“ஒருவேளை வீதிகளில் நடைபெறும் ஆடல்பாடல் களியாட்டங்களைப் பார்க்கப் போயிருப்பான். அவன் திரும்பி வந்ததும் அழைத்து வா! அல்லது யாரையாவது சிலரை அனுப்பித் தேடிப் பார்க்கச் சொல்!” என்று இளவரசர் கட்டளையிட்டார்.

“ஆகட்டும், அரசே! படகோட்டி முருகய்யன் என்பவன் ஒருவன் மாளிகை வாசலில் வந்து காத்திருக்கிறான். தங்களை அவசரமாகப் பார்க்கவேண்டும் என்று அவன் பிடிவாதம் பிடிக்கிறான்!” என்றான் சேவகன்.


படகோட்டி முருகய்யனை இத்தனை நேரம் மறந்திருந்தது பற்றி இளவரசர் பச்சாதாபங் கொண்டார். தாம் இரகசியமாகத் தப்பிச் செல்வதற்கு அவன் ஒரு வேளை உதவியாயிருந்தாலும் இருப்பான்.

(தொடரும்)

## சிறுவர் அரங்கம்



### பாசமுள்ள நாய்க்குட்டி



(நேற்றைய தொடர்ச்சி)

பிறகு அது இறந்து போய் விட்டது. அந்த நாய் இறந்த பிறகு, வீடே வெறிச்சோடிப் போன மாதிரி இருந்தது. இழப்புணர்வு என்னைப் பெரிதும் ஆட்டிப் படைத்தது. என்னால் நீண்டநாள் இப்படி இருக்க முடியாது என்று தோன்றியது.

ஒரு நாள் பக்கத்து ஊருக்கு ஒரு நண்பன் வீட்டுக்குச் சென்றிருந்தேன். அவன் வீட்டில் ஓர் உயர்ந்த சாதி நாய் இருந்தது. அது குட்டி போட்டிருந்தது. ஐந்து குட்டிகள். ஐந்தும் அழகான குட்டிகள். அவற்றை நான் விருப்போடு பார்த்துக்கொண்டிருந்தேன். உடனே அந்த நண்பன், அதில் ஒரு குட்டியை மட்டும் வைத்துக் கொண்டு நான்கை விற்றுவிட இருப்பதாகக் கூறினான். நான் ஒன்றை விலைக்கு வாங்கிக் கொள்வதாகக் கூறினேன். அவன் பணம் வாங்காமலே எனக்குத் தந்து விட்டான். அதை வளர்க்கும் முறைகளையும் விளக்கிச் சொன்னான்.

அந்த நாயையும் அன்பாக வளர்த்தேன். அது கண்ணனைப் போல் சாதுவல்ல. வேண்டாத ஆட்களைக் கண்டால் உறுமும், உறுமுவதைக் கண்டு அவர்கள் ஓடிப் போக வேண்டும். ஓடா விட்டால், இது பாய்ந்து கடித்துக் குதறி விடும். வீர முள்ள நாய். எனவே இதற்கு, நான் மிக மிக மதித்திருந்த வரலாற்று நாயகராகிய சிவாஜி மன்னரின் பெயரை வைத்தேன். சிவாஜி என்று கூப்பிட்டவுடன் அது பாய்ந்தோடி வரும்! அப்போது அந்த மாவீரரைப் போலவே காட்சிதரும்.

சிவாஜி வந்த பிறகு நான் பழைய கண்ணனை மறந்துவிட்டேன் என்றே சொல்லலாம். அது எனக்கு மிக நெருங்கிய தோழனாகி விட்டது.

இறைவன் மனிதர்களுக்கு நீண்ட ஆயுளைக் கொடுத்தது போல், நாய்களுக்குக் கொடுக்கவில்லை. அதிலும் அவை குறுகிய காலத்தில் இறந்து போகும்படியும் விதித்து விடுகிறான். அப்படித்தான். என் சிவாஜியும் தன் ஐந்தாவது வயதில் திடீரென்று நோய் உண்டாகி இறந்து விட்டது. சிவாஜியை இழந்து நான் தவித்த தவிப்பு சொல்லிவிட முடியாது.

ஒரு நாள் அறிவழகன் என்ற என் நண்பன் வந்திருந்தான். சிவாஜி இறந்ததிலிருந்து நீ மிக மெலிந்து விட்டாய். நீ வேறொரு நாய் வாங்கி வளர்க்கலாம் என்றான்.

தொடரும்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

அறத்தாறு இதுவென வேண்டா சிவிகை
பொறுத்தானோடு ஊர்ந்தான் இடை.
– திருக்குறள்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## நாட்டை மீட்கும் பணிக்கு அனைவரும் உதவ வேண்டும்

ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க தலைமையிலான அரசாங்கத்தை என்ன பாடு பட்டும் வீழ்த்த வேண்டும் என்பதில் தென் பகுதியில் உள்ள பேரினவாதத் தரப்புகள் மும்முரமாக உள்ளன.

ஏலவே இந்த நாட்டை ஆட்சி செய்த தரப்புகள் இலங்கையின் ஆட்சி அதிகாரம் என்றும் தங்கள் வம்சத்திடம் இருக்கும் என்றே நம்பி இருந்தன.

ஆனாலும் இயற்கை அதற்கு இடம் தரவில்லை. ஆம், ஆட்சி மாற்றம் ஏற்பட, முன்னவர்களின் கற்பனைக் கோட்டை இடிந்து வீழ்ந்தது.

கூடவே ஒருபுறம் ஊழல் விசாரணைகள் முடுக்கிவிடப்பட மறுபுறத்தில் ஈஸ்டர் குண்டுத் தாக்குதல் விசாரணைகளுடன் போதை ஒழிப்பு நடவடிக்கைகளும் தீவிரப்படுத்தப்பட்டன.

இதனால் ஆட்சி அதிகாரத்திலிருந்த தரப்புகள் கதி கலங்கி எந்த நாசகாரத்தைச் செய்யவும் துணிந்துவிட்டன.

அதன் ஒரு கட்டமாக நீர்கொழும்பு சிறைச்சாலைக் கைதிகளின் மோதல் சம்பவம் அரங்கேறியுள்ளது.

நீர்கொழும்புச் சிறைச்சாலையில் நடத்தப்பட்ட தாக்குதல்கள் நாட்டின் ஸ்திரத்தன்மையைச் சீர்குலைக்கும் – அரசாங்கத்தின் மீது மக்களின் நம்பிக்கையைக் குறைவடையச் செய்யும் என்ற திட்டத்தினூடு அநுரவின் ஆட்சியைக் கவிழ்ப்பதே தீய சக்திகளின் எண்ணமாயிற்று. ஆயினும் நாட்டு மக்கள் உண்மையை உள்ளவாறு புரிந்து கொண்டுள்ளனர்.

நீர்கொழும்புச் சிறைச்சாலையில் இடம் பெற்ற மோதல் சம்பவத்தினை அடுத்து இந்த நாட்டில் போதைப்பொருள் வர்த்தகத்தை முற்றாக ஒழித்துக்கட்ட வேண்டும் என்ற மன உறுதி மக்களிடமும் அரசிடமும் ஏற்பட்டுள்ளது.

ஆக, மானுக்கு எய்திய அம்பு நரியைப் பதம் பார்த்தது போல நிலைமை ஆகியுள்ளது.

ஆம், நம் இலங்கைத் திருநாடு போதைப் பயன்பாட்டிலும் ஊழல் கலாசாரத்திலும் மூழ்கிக் கிடக்கிறது. இதிலிருந்து நாட்டை மீட்டெடுப்பதென்பது மிகவும் கடினமான பணி. இருந்தும் அந்தப் பணியை ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க தலைமையிலான அரசாங்கம் பல்வேறு சவால்களுக்கு மத்தியில் முன்னெடுத்து வருகிறது.

இதில் அரசாங்கம் வெற்றியடைந்தால் மட்டுமே நாட்டு மக்கள் நிம்மதியாக வாழ முடியும்.

ஆக ஊழல், போதைப்பொருள் வர்த்தகம் ஆகியவற்றை தகர்த்தெறிவதில் அரசாங்கம் மேற்கொண்டுவரும் காத்திரமான நடவடிக்கைகளை – ஈஸ்டர் குண்டுத் தாக்குதலின் சூத்திரதாரிகளை நீதியின் முன் நிறுத்தி அவர்கள் யார் என்பதை பொதுமக்களுக்கு வெளிப்படுத்தவும் அரசாங்கம் மேற்கொண்டுவரும் செயற்பாடுகளுக்கு அனைத்துத் தரப்புகளும் ஒத்துழைப்பு வழங்குவதும் காலத்தின் கட்டாயத் தேவையாகும்.

## சிறைக்கலவரம் ஊடாக அரசின் போதைவஸ்து, ஊழலுக்கு எதிரான விசாரணைகளை மழுங்கடிக்கச் சதி

### ~ அமைச்சர் பிமல் தெரிவிப்பு ~

(நீர்கொழும்பு)

நீர்கொழும்புச் சிறைச்சாலையில் இடம்பெற்ற மோதல் சம்பவமானது, போதைப்பொருள் மற்றும் ஊழல் குற்றச்சாட்டுகளில் சிக்கியுள்ள அரசியல்வாதிகள்மற்றும்பாதாளக்குழுக்களால் திட்டமிட்டு, அரசாங்கத்தின் சட்ட நடவடிக்கைகளைக் குழப்பும் நோக்கில் மேற்கொள்ளப்பட்டதா என்ற சந்தேகம் எழுந்துள்ளதாக சபை முதல்வரும் அமைச்சருமான பிமல் ரத்நாயக்க தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை (07) நடைபெற்ற சிறைச்சாலை மோதல் தொடர்பான சபைஒத்திவைப்புவேளை விவாதத்தில் உரையாற்றும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அங்கு மேலும் கருத்துரைத்த அமைச்சர், 1983 கறுப்பு ஜூலை காலத்தில் அரசியல் நோக்கத்திற்காக சிறைக் கைதிகள் படுகொலை செய்யப்பட்டனர். வெலிக்கடைச் சிறைச்சாலையில் இடம்பெற்ற படுகொலைகள் அரசியல் தலைமைபீடத்துடன் இராணுவம்மற்றும்பொலிஸாரைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்டன.

ஆனால் நீர்கொழும்புச் சம்பவம் அதிலிருந்து முற்றிலும் மாறுபட்டது. தற்போதைய அரசாங்கம் முன்னெடுக்கும் போதைப்பொருள் ஒழிப்பு நடவடிக்கைகளில் அரசியல்வாதிகளும் அவர்களது பிள்ளைகளும் சிக்கி வருகின்றனர்.

இவர்களைப் பாதுகாக்கவும் அரசாங்கத்தை பலவீனப்படுத்தவும் இத்தகைய சதி வேலைகள் முன்னெடுக்கப்படுகின்றனவா? என விசாரணைகளில் தேடவேண்டியுள்ளது.

சிறைச்சாலைகளில் நிலவும் நீண்டகாலப் பிரச்சினைகளைத் தீர்க்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளது. இதற்குச் சிறிது காலம் எடுக்கும். நீர்கொழும்புச் சம்பவத்தில் ஏதேனும் சூழ்ச்சி உள்ளதா? என்பது குறித்து விரிவான விசாரணை நடத்தப்படும் என்றார் (ம-7)

## சிறையில் வசதிகள் இல்லையென நாமல் எம்.பி புலம்பித்தள்ளுவது அவரது எதிர்காலத்தை எண்ணியே!

### பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் சூட்சும பதிலடி

(கொழும்பு)

சிறைச்சாலைகளில் போதுமான வசதிகள் இல்லை என்று பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தனது சொந்த எதிர்காலத்தைக் கருத்திற்கொண்டு புலம்புவது நியாயமானதே என்று பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும்பாராளுமன்ற அலுவல்கள் பிரதி அமைச்சர் சுனில் வட்டகல தெரிவித்தார்.

அத்துடன் நாட்டில் பாதாள உலகக் குழுக்கள் என்று குறிப்பிடும் போது ஏதாவது ஒரு வழியில் ராஜபக்ஷக்கள் அவர்களுடன் தொடர்புப்பட்டிருப்பதே உண்மை என்றும் அவர் குற்றம் சாட்டினார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன் தினம் மாலை நடைபெற்ற, நீர்கொழும்புச் சிறைச்சாலை மோதல் சம்பவம் தொடர்பான விசேட சபை ஒத்திவைப்பு விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு பிரதி அமைச்சர் மேலும் உரையாற்றியதாவது,

தற்போது நாட்டில் போதைப் பொருள் பாவனை மற்றும் கடத்தலுக்கு எதிராக அரசால் கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இதனால் போதைப்பொருள் வர்த்தகர்கள் மற்றும் பாதாள உலகக் குழுக்களின் உறுப்பினர்கள், அரசின் இந்த வேலைத்திட்டங்களை நெருக்கடிக்குள்ளாக்குவதற்குப் பல்வேறு சதி முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றார்கள். எனினும் அவர்களின் அந்த முயற்சிகள் ஒருபோதும் வெற்றி பெறாது.

நீர்கொழும்புச் சிறைச்சாலை மோதலைத் தடுப்பதற்கு நீதி அமைச்சர் எவ்வித நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை என்று நாமல் ராஜபக்ஷ குற்றம் சுமத்துகின்றார். ஆனால் நீர்கொழும்பு சிறைச்சாலை சம்பவம் தொடர்பில் பாராளுமன்றத்துக்கு நீதி அமைச்சர் தெளிவான விவரங்களை வழங்கியுள்ளார். இதில் எதனையும் மறைக்க வேண்டிய தேவை தற்போதைய அரசுக்கு இல்லை என்றார். (ம-7)

## காணிப் பதிவாளரொருவர் சி.ஐ.டியால் கைது

காணிப் பதிவாளர் அலுவலகத் தில் 51 வயதான பெண் காணிப் பதிவாளர் ஒரு வர் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஆவணங்களை வெளிநபர்களுக்கு வழங்கி, குற்றச்செயல்களுக்கு உதவிய மற்றும் உடந்தையாக இருந்த குற்றச்சாட்டில் அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவர் குருந்துவத்தை பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட [illegible] கொழும்பு காணிப் பதிவாளர் அலுவலகத்தின் காணிப் பதிவாளர் எனத் தெரியவந்துள்ளது.

குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திற்கு இது தொடர்பில் முறைப்பாடு கிடைத்துள்ளது.

அதற்கமைய நிதி மற்றும் வணிகக் குற்றப் புலனாய்வுப் பிரிவின், நிதிக்குற்றப் புலனாய்வுப் பிரிவிற்கு சந்தேக நபர் அழைக்கப்பட்டு வாக்குமூலம் பெறப்பட்டதன் பின்னரே கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபரான காணிப் பதிவாளர், அலுவலகத்திலிருந்த பதி[illegible] தொகுதிகள், [illegible]திரங்களின் 2ஆம் பிரதிகள் மற்றும் தொகுதிகளில் பிணைக்கப்பட்டிருந்த ஆவணங்களை வெளிநபர்களுக்கு வழங்கியுள்ளார். (ம-7)

## டொலரின் விற்பனை விலை உயர்வு

அமெரிக்க டொலரின் விற்பனை விலை சற்று அதிகரித்துள்ளதாக இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ளது.

அதன்படி நேற்று முன்தினத்துடன்(7) ஒப்பிடுகையில் நேற்று அமெரிக்க டொலரின் விற்பனைப் பெறுமதி அதிகரித்துள்ளது.

அமெரிக்க டொலர் ஒன்றின் கொள்முதல் பெறுமதி 330.28 ஆகவும் விற்பனைப் பெறுமதி 339.73 ஆகவும் பதிவாகியுள்ளது.

ஸ்ரேலிங் பவுண் ஒன்றின் கொள்முதல் பெறுமதி 439.81 ஆகவும் விற்பனைப் பெறுமதி 454.94 ஆகவும் பதிவாகியுள்ளது.

யூரோ ஒன்றின் கொள்முதல் பெறுமதி 375.58 ஆகவும் விற்பனைப் பெறுமதி 389.16ஆகவும் பதிவாகியுள்ளது.

கனேடிய டொலர் ஒன்றின் கொள்முதல் பெறுமதி 231.34 ஆகவும் விற்பனைப் பெறுமதி 240.33 ஆகவும் பதிவாகியுள்ளது. (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# தெவனி எச - 2026 வர்த்தகக் கண்காட்சி

இலங்கையின் படைப்பாற்றல் மற்றும் காட்சித் தொழில் துறைக்கான முன்னணி வர்த்தகக் கண்காட்சியான "தெவனி எச" (Theveni Esa) 16ஆவது கண்காட்சியை 2026 ஜூலை 10 முதல் 12 வரை கொழும்பு 07இல் அமைந்துள்ள BMICH வளாகத்தில் நடைபெறவுள்ளது.

புகைப்படம், காணொளி, சைகை மற்றும் விளம்பரப் பலகைகள், அச்சுத்துறை, விளம்பரத்துறை போன்ற முக்கிய துறைகளையும் ஒரே கூரையின் கீழ் ஒருங்கிணைக்கும் இலங்கையின் ஒரேயொரு கண்காட்சியாக "தெவனி எச" அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

தொழில்துறை நிபுணர்கள், தொழில்முனைவோர் மற்றும் வணிக உரிமையாளர்கள் தங்களது திறன்கள், தொழில்நுட்பங்கள் மற்றும் வணிக வாய்ப்புகளை மேம்படுத்திக்கொள்ள விரும்பும் முக்கிய தளமாக இக்கண்காட்சி தொடர்ந்து விளங்கி வருகிறது.

இக்கண்காட்சியின் ஊடாக முதலீடு செய்வதற்கு முன்னர் சந்தையில் அறிமுகமாகியுள்ள அதிநவீன தொழில்நுட்பங்கள் மற்றும் உபகரணங்களை நேரடியாகப் பார்வையிட்டு மதிப்பீடு செய்யும் அரிய வாய்ப்பு கிடைக்கிறது. அதேவேளை, முன்னணி உற்பத்தியாளர்கள், விநியோகஸ்தர்கள் மற்றும் தொழில்துறை முன்னோடிகளுடன் நேரடியாகச் சந்தித்து கருத்துப் பரிமாற்றம் மேற்கொள்வதற்கும் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

மேலும், குறைந்த முதலீட்டில் அதிக வருமானத்தை ஈட்டக்கூடிய வணிக மாதிரிகள், தொழில் விரிவாக்க உத்திகள் மற்றும் புதிய வருவாய் வாய்ப்புகள் தொடர்பான பயனுள்ள தகவல்களையும் பங்கேற்பாளர்கள் பெற்றுக்கொள்ள முடியும்.

இதனுடன், புகைப்படம், காணொளி, சைகை மற்றும் காட்சிப்படுத்தல், அச்சுத்துறை, விளம்பரத்துறை ஆகிய ஐந்து முக்கிய துறைகளிலும் செயற்படும் தொழில்முறை நிபுணர்கள், வணிக நிறுவனங்கள் மற்றும் எதிர்கால வணிகக் கூட்டாளர்களுடன் தொடர்புகளை ஏற்படுத்தி தங்களது தொழில் வலையமைப்பை விரிவுபடுத்துவதற்கும் இக் கண்காட்சி சிறந்த தளமாக அமையும் என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.




# ஸ்ரீ லங்கா இன்சுரன்சின் காப்புறுதி ஒப்பந்தகாரரர்களுக்கான மாபெரும் போனஸ்





தேசத்தின் உறுதியான மற்றும் நம்பிக்கையை வென்ற ஆயுள் காப்புறுதி சேவை வழங்குனர் எனும் வகையில் ஸ்ரீ லங்கா இன்சுரன்ஸ் லைஃப் (SLICLL), 2025 ஆம் ஆண்டுக்கான தனது ஆயுள் காப்புறுதி ஒப்பந்ததாரர்களுக்கு மாபெரும் ரூ 14.68 பில்லியன் போனஸ் கொடுப்பனவை வழங்கவுள்ளதாக அறிவித்துள்ளது. இலங்கையின் ஆயுள் காப்புறுதித் துறையில் அதியுயர் வருடாந்த ஆயுள் காப்புறுதி போனஸ் கொடுப்பனவாக இது அமைந்துள்ளது. இந்த பிரகடனத்தினூடாக 2006 ஆம் ஆண்டு முதல் காப்புறுதி ஒப்பந்ததாரர்களுக்கு செலுத்தப்பட்டுள்ள மொத்த போனஸ் கொடுப்பனவுத் தொகை ரூ 131.28 பில்லியனாக உயர்வடையும். அதனூடாக வருடாந்தம் தொடர்ச்சியாக அதியுயர் போனஸ் கொடுப்பனவை வழங்கும்ஸ்ரீ லங்கா இன்சுரன்ஸ் லைஃப் நிறுவனத்தின் அசைக்க முடியாத சாதனை மேலும் உறுதி செய்யப்பட்டுள்ளது.

பொருளாதார செயற்பாடுகள் மீட்சியை பதிவு செய்திருந்த ஆண்டில், ஒப்பற்ற மீட்சி மற்றும் நிதிசார் முன்னேற்றத்தைஸ்ரீ லங்கா இன்சுரன்ஸ் லைஃப் வெளிப்படுத்தியிருந்தது. 2025 ஆம் ஆண்டின் இறுதியில், நிறுவனத்தின் மொத்த சொத்துக்களின் பெறுமதி ரூ. 275 பில்லியனாக பதிவாகியிருந்ததுடன், ஆயுள் நிதியம் ரூ. 247 பில்லியனாக உயர்வடைந்து, தொழிற்துறையின் மாபெரும் ஆயுள் காப்புறுதி நிதியம் எனும் தனது நிலையை தொடர்ந்தும் பேணியிருந்தது. வருடம் முழுவதிலும், சராசரியாக, மாதமொன்றில் ரூ.1.35 பில்லியனுக்கு அதிகமான தொகை முதிர்வு மற்றும் உரிமை வழங்கலகளாக ரூ. 16.2 பில்லியனுக்கும் உயர்வான தொகையும் செலுத்தப்பட்டிருந்ததுடன், வருடாந்த போனஸ் பிரகடனத் தொகைக்கு மேலதிகமாக இந்தத் தொகைகள் செலுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. அதனூடாக, நிறுவனத்தின் உறுதியான முதலீட்டு நிர்வாக மூலோபாயங்கள் மற்றும் காப்புறுதிதாரர் பாதுகாப்பில் ஒப்பற்ற அர்ப்பணிப்பு ஆகியுனவும் வெளிப்படுத்தப்பட்டிருந்தன.

ஆறு தசாப்த காலத்துக்கு மேலாக ஜாம்பவானாக திகழும் ஸ்ரீ லங்கா இன்சுரன்ஸ் லைஃப் தனது வாக்குறுதிகளை தொடர்ச்சியாக நிறைவேற்றி வந்துள்ளதுடன், இலங்கையின் பல தலைமுறையினர் மத்தியில் ஆழமான நம்பிக்கையையும் கட்டியெழுப்பியுள்ளது. பல்வேறு சவால்கள் எழுந்த போதிலும், 2025 ஆம் ஆண்டில் நிறுவனம் உயர்வான நிதிப் பெறுபேறுகளைப் பதிவு செய்திருந்தது. வரிக்கு முந்திய இலாபம் ரூ. 4.3 பில்லியனாக பதிவாகியிருந்தது. தேறிய கட்டுப்பண செலுத்தல்கள் (GWP) ரூ. 32.6 பில்லியனாக உயர்வடைந்து, 24% வருடாந்த வளர்ச்சியை எய்தியிருந்தது. புதிய வியாபார கட்டுப்பணங்களின் வருமானம் 42% இனால் அதிகரித்து ரூ. 7.56 பில்லியனாக பதிவாகியிருந்தது.

கல்விசார் திட்டங்கள் மூலமாக தேசத்தைக் கட்டியெழுப்புவதற்கு வழங்கிவரும் தொடர்ச்சியான பங்களிப்பைப் பாராட்டும் முகமாக, ஸ்ரீ லங்கா தலைமைத்துவ விருதுகள் 2025 நிகழ்வில், சமூகப் பொறுப்புணர்வுக்கான சிறந்த செயற்பாட்டுபிரிவின் கீழ், "கல்வியின் தரத்தை ஆதரித்தலும் மேம்படுத்தலும்" என்ற விருது வழங்கி ஸ்ரீ லங்கா இன்சுரன்ஸ் லைஃப் கௌரவிக் கப்பட்டது. இந்த ஆண்டின் சாதனை அளவிலான போனஸ் அறிவிப்பானது, நிறுவனத்தின் நிலையான வாக்குறுதியான "ஏற்பாடுகளுக்கு அப்பாலான நம்பிக்கை" (Trust That Goes Beyond Measures) என்பதைப் பிரதிபலிக்கின்றது.

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3377


நிஷா




ரிஷி




கீர்த்தனா




சுகி




கஜவர்சன்




ஆதனா




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampuri எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## அழுத்தத்துக்கு...

தெரிவித்தார்.

நீர்கொழும்பு சிறைக்கலவரம் தொடர்பில் ஊடகங்களிடம் கருத்துத் தெரிவிக்கும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜனாதிபதியால் மட்டுமே என்னை அமைச்சுப் பதவியிலிருந்து நீக்க முடியும்.

ஜனாதிபதி வர்த்தமானி மூலம் அறிவித்தால் நீதி அமைச்சர் பதவியிலிருந்து விலகத் தயாராக இருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

சிறை மோதல் தொடர்பாக நியமிக்கப்பட்ட விசாரணைக் குழுவின் அதிகாரிகள், தற்போது மிகவும் சுதந்திரமான முறையில் தங்கள் விசாரணைகளை நடத்தி வருவதாகவும் அதே போல், மோதலில் காயமடைந்து மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்றுவரும் கைதிகள் அளித்த வாக்குமூலங்கள், ஒட்டுமொத்த விசாரணையை வெற்றிகரமாக்கவும், உண்மையான தகவல்களை வெளிக்கொணரவும் மிக முக்கியமான சான்றுகளாக அமையும் என்றும் அமைச்சர் மேலும் சுட்டிக்காட்டினார். (ம-7)

## வவுனியாவில்...

இடம்பெற்றுள்ளது.

வீதியைக் கடக்க முற்பட்டவரை வீதியின் இருபுறமும் பயணித்த ஹயஸ் மற்றும் கார் மோதியதில் குறித்த அனர்த்தம் இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பில் புளியங்குளம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,250)

## மாதகலில்...

நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளது.

காணியின் உரிமையாளர் காணியை சுத்தம் செய்யும்போது குறித்த கைக்குண்டு அவதானிக்கப்பட்டது.

இது தொடர்பில் இளவாலை பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்ட நிலையில் நீதிமன்ற அனுமதியுடன் இன்றைய தினம் கைக்குண்டு அகற்றப்படவுள்ளது. (ம-7,104)

## பாராளுமன்ற...

ருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் விடுத்த கோரிக்கையையடுத்து அவரது ஆசனம் இடமாற்றப்பட்டுள்ளது. அதற்கமைய எதிர்க்கட்சிப் பக்கத்தில் நான்காவது நிரையில் முதல் வரிசையில் மூன்றாவது இடத்தில் இருந்த பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் ஆசனம் அந்த வரிசையில் முதலாவது இடத்திற்கு மாற்றப்பட்டுள்ளது.

இதுவரை காலமும் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்திற்கு அடுத்ததாக யாழ். மாவட்ட சுயேட்சைக் குழு பாராளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா இராமநாதனின் ஆசனம் அமைந்திருந்தது.

ஆனால் அர்ச்சுனா இராமநாதனுக்கு அருகில் உள்ள தனது ஆசனத்தை அரசியல் கட்சி மற்றும் சிரேஷ்டத்துவ அடிப்படையில் வேறு இடத்திற்கு மாற்றுமாறு கஜேந்திரகுமார் சபாநாயகருக்கு எழுத்து மூலம் கோரிக்கை விடுத்திருந்தார்.

பாராளுமன்றத்தில் எனக்கு இடது புறத்தில் அமர்ந்துள்ள பாராளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா இராமநாதன், பொதுவெளியிலும், மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டங்களிலும், சமூக ஊடகங்களிலும் என்னைத் தொடர்ந்து அவதூறாகப் பேசி, மிரட்டல் விடுத்து, இழிவான சொற்களைப் பயன்படுத்தி வருகிறார் என்பதை நீங்கள் அறிவீர்கள்.

அண்மைக் காலத்தில் அவரது இந்த நடத்தை மிகவும் மோசமடைந்துள்ளதால், பாராளுமன்ற சபைக்குள் அவர் எனக்கு அருகில் அமர்ந்திருப்பது எனது கவனத்தைச் சிதறடிப்பதுடன், அவ்வாறு அமர்ந்திருப்பது சாத்தியமற்றதொன்றாக மாறியுள்ளது என்று கோரிக்கை விடுத்திருந்தார்.

இந்தக் கோரிக்கைக்கமைய எதிர்க்கட்சிப் பக்கத்தில் நான்காவது நிரையில் முதல் வரிசையில் முதலாவது இடத்திற்கு அவரின் ஆசனம் மாற்றப்பட்டுள்ளது. அத்துடன் கஜேந்திரகுமாரிற்கு அடுத்ததாக ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதனின் ஆசனமும் அடுத்ததாக தொழிற்கட்சியின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தானின் ஆசனமும் மாற்றப்பட்டுள்ளது. எனினும் அர்ச்சுனா இராமநாதனின் ஆசனம் ஏற்கெனவே இருந்த இடத்திலேயே உள்ளது. (ம-7)

## 694 டெங்கு...

தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த வருடமும் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் டெங்கால் எந்த ஒரு இறப்புமே பதிவு செய்யப்படவில்லை. கடந்த வருடமும் இந்த வருடம் ஜூன் மாதம் இறுதிப்பகுதி வரை டெங்கு நோய் யாழ்ப்பாணம் மாவட்டத்திலே ஒரு பூரணமான கட்டுப்பாட்டிலே இருந்து வந்தது.

ஆனால் தற்போது நாட்டின் தென் பகுதியிலே, ஏனைய பல மாகாணங்களிலே டெங்கு நோயின் பரம்பல் மிகத் தீவிரமாகக் காணப்படுகின்றது. இந்த பின்னணியிலே, ஜூலை மாதம் முதல் 7 நாட்களிலே, 65 நோயாளர்கள் யாழ்ப்பாணம் மாவட்டத்திலே டெங்கு நோயுடன் இனங் காணப்பட்டிருக்கின்றார்கள். இது ஒரு சடுதியான அதிகரிப்பாகும்.

மேல் மாகாணத்திலே குறிப்பாக கொழும்பு, கம்பஹா மாவட்டங்களிலே அதிகமான டெங்கு நோயாளர்கள் தற்போது இனங் காணப்பட்டிருக்கின்றார்கள்.

யாழ்ப்பாணம் மாவட்டத்தைச் சேர்ந்த பல மாணவர்கள் தென் பகுதியிலே, குறிப்பாக மேல் மாகாணத்தில் இருக்கின்ற பல் கலைக் கழகங்களிலே, உயர் கல்வி நிறுவனங்களிலே கல்வி கற்கின்றார்கள்.

அதே போன்று பலர் தொழில் நிமிர்த்தம் யாழ்ப்பாணம் மாவட்டத்திலிருந்து கொழும்பிலே தங்கியிருந்து தொழில் செய்து வருகின்றார்கள்.

அவர்கள் விடுமுறைக்கு இங்கே வருகின்றபோது, பலர் இங்கே டெங்கு நோயுடன் வந்து எங்களுடைய வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்

பட்டு தற்போது சிகிச்சை பெற்று வருகின்றார்கள் எனத் தெரிவித்தார். (ம-7,33)

## மேலும் ஒரு ...

உயிரிழந்துள்ளார்.

மேலும் நீர்கொழும்பு சிறைச்சாலையில் ஏற்பட்ட அமைதியின்மைக்குப் பின்னர் அங்குனுகொலபெலஸ்ஸ சிறைச்சாலைக்கு மாற்றப்பட்ட கைதி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இதற்கிடையில், பூஸா சிறைச்சாலைக்கு மாற்றப்பட்ட கைதி ஒருவர், திடீர் சுகவீனம் காரணமாக காலி, கராபிட்டிய மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் உயிரிழந்தார்.

குறித்த கைதி திடீர் உடல்நலக் குறைவு காரணமாக காலி கராப்பிட்டிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் இவ்வாறு உயிரிழந்துள்ளதாக சிறைச்சாலைகள் ஊடகப் பேச்சாளர் ஏ.சி. கஜநாயக்க தெரிவித்துள்ளார். (ம-7)


மஹஜன சம்பத — திகதி 2026.07.08 — சீட்டிழுப்பு இலக்கம் 6242 — ஆங்கில எழுத்து Q — வெற்றி இலக்கங்கள் 6 8 7 1 4 4
அத சம்பத — Q 7 1 4 4 — சீட்டிழுப்பு இலக்கம் 0817

சுப தவசக் — திகதி 2026.07.08 — சீட்டிழுப்பு இலக்கம் 0358 — மகரம் — 07 44 62 — 5488

தன நிதானய — திகதி - 2026.07.08 — சீட்டிழுப்பு இலக்கம் - 2272 — W 30 32 44 46 W

மெகா பவர் — திகதி 08/07/2026 — சீட்டிழுப்பு இலக்கம் 2590 — E 25 04 22 46 66

ஜய — 2026.07.08 — சீட்டிழுப்பு இலக்கம் 0510 — H 3 8 4 8

கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 4484 — சீட்டிழுப்பு திகதி 08.07.2026 — C 02 33 50 52

ஹதஹன HANDAHANA — உத்தியோகபூர்வ முடிவுகள் — சீட்டிழுப்பு திகதி 2026.07.08 — சீட்டிழுப்பு இலக்கம் 1551 — மீனம் 11 24 46 48 மீனம்

உத்தியோகபூர்வ முடிவுகள் — சுபிரி வாசனா — 08.07.2026 — வெற்றி வாரம் 0950 — ஆங்கில எழுத்து V — 2 9 5 5 5 3 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.23,479,462.80

SUPER BALL — சீட்டிழுப்பு வாரம் 3216 — 25000 பணப் பரிசு 56500 — சீட்டிழுப்பு திகதி 2026.07.08 — தினம் புதன்கிழமை — 05 20 53 73 T — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 54,589,393.60

சனிதா — திகதி 08.07.2026 — வெற்றி வாரம் 5377 — 19 35 39 56 A — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 59,156,792.80 — ரூ. 50,000/- பணப்பரிசு 32304

சசிரி — வெற்றி வாரம் 1046 — சீட்டிழுப்பு திகதி 08.07.2026 — புதன்கிழமை — வெற்றி இலக்கங்கள் 02 20 27 — வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. ரூ.3,930,240.00

ராசி — சீட்டிழுப்பு வாரம் 4928 — சீட்டிழுப்பு திகதி 08.07.2026 — தினம் புதன்கிழமை — 04 11 14 37 மிதுனம் — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.5,658,914.80

லக்ன வாசனா — ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம் — T 05 06 08 20 63 — 2392 — 08.07.2026 புதன்கிழமை — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.311,324,237.00

அத கோட்டிபதி ADA KOTIPATHI — புதன்கிழமை — வெற்றி வாரம் : 3042 — சீட்டிழுப்பு திகதி : 2026.07.08 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.52,309,400.00 — 14 21 29 41 U


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (C-5992)

076 825 7716 (ஆகாஸ்)



## மணமகன் தேவை

01. புலோலி, இந்து, 1994, ரோகினி, MBBS, Doctor, UK Citizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. (58777)
02. புங்குடுதீவு, இந்து, 1993, திருவாதிரை, BA, UK Citizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. (58007)
03. கொக்குவில், இந்து, 1996, பூரட்டாதி, LLB, Legal Advisor, UK Citizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. (55651)
04. சாவகச்சேரி, இந்து, 2001, ரேவதி, Bachelor of business information System, Australia Citizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. (58645)
05. வட்டுக்கோட்டை, இந்து, 1997, ரோகினி, Electrical and Electronic Engineering, System Engineer, Australia Citizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. (55606)
06. சில்லாலை, இந்து, 1993, திருவாதிரை, BSc Civil Engineering, Australia Citizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. (54933)
07. உரும்பிராய், இந்து, 1999, மகம், Finance and Economics, Australia Citizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. (53572)
08. திருநெல்வேலி, இந்து, 1998, உத்தராடம், MBBS, Doctor, Australia Citizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. (36481)
09. மீசாலை, இந்து, 1993, கார்த்திகை, Civil Engineer, Australia Citizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. (34142)
10. காரைநகர், இந்து, 1992, சித்திரை, MSc in Finance, MBA (UK), Finance Administrator and Business Operational Analyst, Canada Citizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. (54115)

எம்மிடம் எல்லா நாட்டிலும் Unmarried, Divorce மணப்பெண்களும் மாப்பிள்ளைகளும் உண்டு. (C-5991)

S.Sharma J.P
www.thaalee.com
077 992 1494
077 539 3728



## பாராட்டி வாழ்த்துகின்றோம்



முகாமையாளர்
திருமதி தயாளினி செந்தில்நாதன்
SLTES II (BA, PGDE, MA, MED, PGDEM)

இன்று கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த மாநாட்டு மண்டபத்தில் இடம்பெறும் தேசிய கல்வி நிறுவக பட்டமளிப்பு நிகழ்வில் கல்வி முகாமைத்துவத்தில் பட்டப்பின் டிப்ளோமா (PGDEM) பட்டத்தைப் பெறும் எமது நிலைய

Best Wishes

ஆகியோரை மகிழ்வுடன் பாராட்டி வாழ்த்துகின்றோம்.



விரிவுரையாளர்
திருமதி ருஷானா வர்ஜிலியா பாலமுரளி
SLTES III (BA, NDT, PGDE MED, PGDEM)

ஆசிரியர் வாண்மை விருத்தி நிலையம்
யாழ்ப்பாணம்.

(8010)

வாழ்த்துவோர்:- விரிவுரையாளர்கள், தொழில் வழிகாட்டல் அதிகாரி மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள்.



## வேலைவாய்ப்பு அறிவிப்பு

கிளிநொச்சியில் அமைந்துள்ள உற்பத்தி நிறுவனத்தில் பணியாற்ற ஆர்வமுள்ள ஆண்/ பெண் தொழிலாளர்கள் தேவை.

தகுதிகள்
- வயது எல்லை : 22 – 45
- உடல் ஆரோக்கியம் மற்றும் பொறுப்புணர்வு
- குழுவாகப் பணியாற்றும் திறன்.

ஆர்வமுள்ளவர்கள் உடனடியாக தொடர்பு கொள்ளவும்.

(2493)

T.P : 077 444 5265



## வேலையாட்கள் தேவை

சாவகச்சேரியில் இயங்கி வருகின்ற சிவபூமிப் பாடசாலைக்கு சாரதி தேவை. மற்றும் மயிலிட்டியில் அமைந்துள்ள தோட்டத்தைப் பராமரிப்பதற்கு தோட்டப் பராமரிப்பாளர் தேவை. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கலாம்.

தொடர்புகளுக்கு : 021 222 7938

(C-5990)



## கசிப்புடன் இருவர் கைது

கொக்கட்டிச்சோலையில் இருந்து மண்முனைப்பற்று பிரதேசத்திற்கு வாவி ஊடாக தோணியில் கசிப்பு கடத்தி வந்த இருவரை மண்முனைப்பற்று வாவிக்கரையில் வைத்து பொலிஸார் கைது செய்துள்ளார்.

நேற்றுப் புதன்கிழமை 800 லீற்றர் கசிப்புடன் குறித்த நபர்களைக் கைது செய்துள்ளதாகவும் கைது செய்யப்பட்டவர்கள் 25, 26 வயதுடையவர்கள் என தெரிய வந்துள்ளதாகவும் காத்தான்குடி பொலிஸார் தெரிவித்தனர்.

(ம-7)


# மரண அறிவித்தல்



## முருகேசு விநாயகமூர்த்தி

பிறப்பு
07.09.1947

மறைவு
05.07.2026

மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட முருகேசு விநாயகமூர்த்தி அவர்கள் கடந்த 05.07.2026 ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகேசு - மாரிமுத்து தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான தியாகராசா - சரஸ்வதி தம்பதிகளின் அன்பு மருமகனும் சுஜேதா அவர்களின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான பூபதி சுப்பிரமணியம், கந்தசாமி, பகவதி மற்றும் இராமுப்பிள்ளை, சேதுபதி ஆகியோரின் அன்புச் சகோதரனும் சியாமளா, மகேந்திரன், ஸ்ரீலதா, முரளிதரன், சசிதரன், சசிலேகா ஆகியோரின் மைத்துனரும் கவிதா, கணாதீபன், கஜானா ஆகியோரின் அன்புத் தந்தையாரும் ரமேஸ், ஜீவரஜனி, ஆதவன் ஆகியோரின் மாமனாரும் சகானா, விகாஸ், அவிக்னன், ஆர்னா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.07.2026) வியாழக்கிழமை காலை 11.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மல்லாகம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

நீலியம்பனை,
மல்லாகம்.

(2491)

தகவல் :
குடும்பத்தினர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 09.07.2026 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.